# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு2029 புரட்டாதி20செவ்வாய்க்கிழமை(06-10-1998) UTHAYAN - A Lively National Tamil Daily சுடர்:267


## 'லயன் ஏயர்' விமானம் கடலில் வீழ்ந்ததில்

# பலியான பயணிகளின் உறவினரை

# இரணைதீவு கூட்டிச் செல்ல முயற்சி!

## அங்கு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை மேற்கொள்வதற்கு வசதியாக

மன்னார், ஒக்டோபர் 6

இரணைதீவில் 'லயன் ஏயர்' விமானம் வீழ்ந்த கடற்பகுதிக்கு அந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களை அழைத்துச் செல்லவும்—

உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் ஆத்மசாந்தி நிகழ்வு ஒன்றை அங்கு நடத்தவும்—

மன்னார் அரச அதிபர் எஸ். எம். குரூஸ் ஏற்பாடு செய்து வருகின்றார்.

இது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும்—

அவர்கள் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி அனுமதி பெற்ற பின்னர் உரிய திகதி அறிவிக்கப்படும் என்றும்—

அத்தினத்தில் உறவினர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியுடன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### காப்புறுதி மற்றும் நஷ்டஈடு பெற

## விமானம் கடலில் வீழ்ந்ததை சட்டரீதியாக உறுதி செய்ய வேண்டும்

### மன்னார் செயலக அதிகாரிகள் முயற்சி

மன்னார், ஒக். 6

விமானம் கடலில் வீழ்ந்த இடத்துக்குச் சென்று விமானப் பாகங்களையும் விமானத்துக்குள் சிக்கியிருக்கும் மனித சடலங்களையும் மீட்கும் முயற்சியை 'லயன் ஏயர், நிறுவனத்தினர் கைவிட்டுள்ள போதிலும்—

அந்த இடத்துக்குச் செல்லும் முயற்சியில் மன்னார் செயலக அதிகாரிகள் முனைப்பாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

விமானம் கடலில் வீழ்ந்ததால் நஷ்டமடைந்த நிறுவனம் உரிய காப்புறுதி பெறுவதற்கும்—

அச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் உறவினர்களுக்கு காப்புறுதிப்பணம் கிடைப்பதற்கும்—

விமானம் கடலில் வீழ்ந்தமை சட்டரீதியாக உறுதிப்படுத்தப்படவேண்டும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மன்னார் அரச அதிபரின் பிரதிநிதி ஒருவர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று சுழியோடிகள் மூலம் கடலுக்குள் இருந்து விமானத்தின்— உறுதிப்படுத்தப்பட்ட— பாகம் ஒன்றை வெளியே எடுத்து வந்தால்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இதுவரை 29சடலங்கள் கரைசேர்ந்ததாகத் தகவல்

கொழும்பு, ஒக். 6

'லயன் ஏயர்' விமானம் கடலில் மூழ்கியதில் உயிரிழந்த பயணிகளில் 29 பேரின் சடலங்கள் இதுவரை வெவ்வேறு இடங்களில் கரை ஒதுங்கியிருப்பதாகக் கொழும்புக்குக் கிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

பள்ளிக்குடா, நாச்சிக்குடா, பூநகரிப் பகுதிகளில் இருபத்திமூன்று சடலங்கள் வரை கரை ஒதுங்கியதாக ஒரு தகவல் தெரிவித்தது.

காங்கேசன்துறைக் கடற்படையினர் கடலில் இரண்டு சடலங்களைக் கண்டதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (உ)

## விமான நிறுவன நிபுணர் நேற்று கொழும்பு வருகை

கொழும்பு, ஒக். 6

இரணைதீவுக் கடற்பகுதியில் மூழ்கிய ''லயன் ஏயர்'' விமானம் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு உக்ரைன் நாட்டு நிபுணர்கள் குழு ஒன்று நேற்று இரவு கொழும்பு வந்து சேர இருந்தது.

இந்தக் குழுவில் விமான தொழில்நுட்ப நிபுணர்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை வானொலியில்

## பி.பி.சி. சிங்கள சேவை அஞ்சலை நிறுத்த முயற்சி

கொழும்பு, ஒக். 6

பி. பி. சியின் சிங்கள ஒலிபரப்பான 'சந்தேசியவை' இலங்கை வானொலி மூலம் அஞ்சல் செய்வதை நிறுத்துவதற்கு திரைமறைவில் முயற்சிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கே இடம்பெறும் யுத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அ'புரம் சிறையில் தமிழ் கைதிகளை தாக்க தீட்டிய சதித்திட்டம் பிசுபிசுப்பு

### 80 பேர் களுத்துறைக்கு இடமாற்றம்

கொழும்பு, ஒக். 6

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் மீது தாக்குதல் நடத்த சிங்களக் கைதிகள் தீட்டிய திட்டம் அம்பலமானதையடுத்து அங்கிருந்த தமிழ்க் கைதிகளில் 80 பேர் களுத்துறைச் சிறைச்சாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள் 80 பேர் உட்பட 125 தமிழ்க் கைதிகள் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்; அவர்களில் மூவர் பெண்கள் ஆவர்.

தமிழ்க்கைதிகள் மீது தாக்குதல் தொடுக்க அங்குள்ள 25 சிங்களக் கைதிகள் தீட்டியிருந்த திட்டத்தைச் சிறைச்சாலை அதிகாரிகள் தக்க சமயத்தில் கண்டுபிடித்து அங்கு இடம்பெறவிருந்த மோதலைத் தடுத்து நிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் தாக்குதல் தொடர்பான செய்திகளைக் கேட்டு அங்குள்ள

(10 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளுக்கு ஆதரவாக

## பதுளையில் ஊர்வலம் நடத்த முயற்சி

கொழும்பு, ஒக் 6

பதுளை நகரத்தில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக ஊர்வலம் நடத்த முயன்ற சிங்களவர்கள் சிலரை பொதுமக்கள் திரண்டு தாக்க முற்பட்டதாகவும் —

பொலிஸார் பின்னர் தலையிட்டு அவர்களை அப்புறப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினர் மன்னாரில் சுட்டுக்கொலை

மன்னாரில் புளொட் இயக்க உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கோபு எனப்படும் கந்தசாமி தமிழ்வாணன் என்ற உறுப்பினரே கொல்லப்பட்டவர் ஆவார்.

இவர் வீட்டில் இருந்த சமயம் சிலர் வந்து அழைத்தனர் என்றும் —

அவர் வீட்டுக்கு வெளியே சென்றபோது சுடப்பட்டதாகவும் புளொட் அமைப்பின் தலைமையகம் தெரிவித்தது. (ஐ-6-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம்

உலக ஆசிரியர் தினமாகிய இன்று
விழா நாயகர்களான

**ஆசிரியர்களை**

வாழ்த்தி வணங்கி கௌரவிக்கின்றோம்.

மாணவர்கள், பெற்றோர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

(59670)


## கோண்டாவிலில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஒக். 6

கோண்டாவில் கிழக்குப் பகுதி நேற்றுக் காலை படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு, பெரும் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

வீடுகளில் இருந்த அனைவரும் இந்தப் பகுதியிலுள்ள காளிகோயிலுக்குக் கூட்டிச் செல்லப்பட்டு விசாரணையின் பின் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

(ஐ-109-135)

## உபகரணங்கள் அன்பளிப்பு

வலி. தென்மேற்கு, ஒக். 6

யுனிசெவ் நிறுவனத்தினால் யாழ். சுக வாழ்வு நிறுவனத்துக்கு ஜெனரேட்டர், தொலைக்காட்சிப் பெட்டி, டெக் மற்றும் காற்றாடிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதாக சுகவாழ்வு நிறுவன நிர்வாக அலுவலர் வியோ எதிர் மன்னசிங்கி தெரிவித்தார்.

கடந்த வாரம் கிடைத்த மேற்படி உபகரணங்கள் குழந்தைகளின் சமூக உள வளர்ச்சித் தேவைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

(இ-185)


## இதய பூர்வமான வாழ்த்துக்கள்

வார்த்தையில் தெளிவும், கண்ணிலே கனிவும், கண்டிப்பும் காட்டி, எண்ணெழுத்தறிவோடு அனுபவ அறிவையும் கலையுணர்வையும் சேர்த்தூட்டி, எமது வளமான எதிர் காலத்தின் வழி காட்டியாக அமைந்து

எமது இதயத்தில் வாழும்
சுன்னாகம்

**ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

அதிபர், உபஅதிபர், ஆசிரியர்களையும் ஏனைய ஆசிரியர்கள் அனைவரையும் இந் நன்னாளில் வளமான வாழ்வுக்காக இதய பூர்வமாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

ஸ்கந்தாவின் மைந்தர்கள்
(97 கலைப் பிரிவு)

(சி/5097)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கடந்த பதினாறு வருடங்களாக பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வாக சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை நடத்தி வந்துள்ளது. இவ் வருட பதினேழாவது நினைவுப் பேருரையை

தமிழ்ப் பேராசிரியரும், கலைப்பீடாதிபதியுமாகிய
அ. சண்முகதாஸ் அவர்கள்

''இந்து சமயத்தில் மலர்கள் - சம்பந்தர் பாடல்களினூடாக ஒரு நுனித்த நோக்கு''

என்னும் தலைப்பில் 1998-10 06 ஆம் திகதி மாலை 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

— உபவேந்தர்

(இ-5094)


## பல்கலைக்கழக ஆலயத்தில் விசேட பூசை

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட தினமான இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 10 மணிக்கு பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் அஷ்டோத்தர சங்காபிஷேகமும், விசேட பூசைகளும் இடம் பெறவுள்ளன.

(இ-8)


## பொதுக் கூட்டம்

யாழ். பல்கலைக்கழக மாணர்வகளுக்கான
அவசர பொதுக் கூட்டம்

இடம்: கைலாசபதி கலையரங்கு
காலம்: 06-10-1998 [இன்று செவ்வாய்]
நேரம்: முற்பகல் 11-00 மணி

அனைத்து மாணவர்களும்
தவறாது கலந்துகொள்ளவும்.

நன்றி!

மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்.

(59685)



## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 09 — 10 — 1967

இறப்பு 29 — 09 — 1998

### அமரர் இ. ராஜீ

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட
எமது சக தோழர்
இ. ராஜீ நல்லூர் ப. நோ. கூ. சங்க
விற்பனையாளர்

அவர்கள் 29 - 09 - 98 இல் லயன் எயர் விமான விபத்தில் அகால மரணமடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயரமடைகின்றோம்.

இவருடன் பயணம் செய்த இவரது அன்புத்தாயார்

**திருமதி பி. இராஜரட்ணம்**

அவர்களும் அகாலமரணமடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயரமடைகின்றோம்.

இவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் இவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
கிளை: நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

(58670)



## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்

இன்று மட்டும்
தேசியவிருது பெற்ற
சிவாஜி - ராதா
சத்தியராஜ் நடித்த
முதல்மரியாதை
( ரீலீஸ் )

நாளை முதல்
சத்திரிய வம்சம்
காட்சி: 10-30, 2-30

(59684)



## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

அரவிந்தசாமி
மதுபாலா - ஸ்ரீவித்தியா
ஜனகராஜ் - நாஸர்
நடித்த

**ரோஜா**

இனிய பாடல்கள்
நிறைந்தது
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

(சி/5020)



## மரண அறிவித்தல்கள்

திருமதி

### ஸ்ரெல்லா இரபேக்கா பிரெட்றிக் (லீலா)

(ஓய்வுபெற்ற ஆசிரியர், திருக்குடும்ப கன்னியர் மடம்)

யாழ்ப்பாணம், மாட்டீன் வீதியைச் சேர்ந்த ஸ்ரெல்லா இரபேக்கா பிரெட்றிக் (லீலா) 04-10-1998 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரெட்றிக்கின் மனைவியும் இம்மானுவேல், பீற்றர், இமெல்டா, அருட்சகோதரி மேரி எவெரெஸ்ரா(தி.கு.), கிளிபேட் ஆகியோரின் சகோதரியும் ரஞ்சி, ராஜி, அருட்தந்தை தேவராஜ் (அ. ம. தி.), ராஜன், ஜான்சி ஆகியோரின் தாயாரும் கொட்பிறி, றெஜினோல்ட் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

இவரது இறுதிச் சடங்குகள் இல: 70 A, தவளசிங்கராஜ மாவத்தை, கொழும்பு — 15 இல் புதன்கிழமை நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நாளை 07-10-98 புதன்கிழமை காலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம், அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

தகவல்:
அருள்திரு ம.வி.இ. இரவிச்சந்திரன்

புனித அன்னாள் ஆலயம்,
பாண்டியன்தாழ்வு.

(59677)

### திரு. திருமதி ரகுநாதன்

மூளாய், வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தற்போது நீர்கொழும்பு, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட ரகுநாதன் (முன்பு சென். ஜோன்ஸில் கடமையாற்றியவர்), சித்திரா (கூட்டுறவு பரிசோதகர், வவுனியா) 29 - 9 - 98இல் அகால மரணமாயினர்.

அன்னார் காலஞ்சென்ற சட்டத்தரணி (மூளாய்) குமாரசாமி — தேன்மொழியின் அன்பு மகனும், மருமகளும் — (வட்டுக்கோட்டை) கனகரட்ணம் (Rtd-R. M. P.), அமுதவல்லி தம்பதிகளின் மருமகனும், புத்திரியும் உடுவிலைச் சேர்ந்த சுமதினியின் அன்புச் சகோதரரும், மைத்துனியும் ஆவார்கள்.

இத்தகவலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம. சுமதினி
(சகோதரி, மைத்துனி)

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(59655)



எமது வாடிக்கையாளர்களின் வேண்டுதலுக்கிணங்க...

## காவேரியின் தீபாவளி மாபெரும் மலிவு விற்பனை

நீடிக்கப்பட்டுள்ளது

முந்துங்கள்! விரையுங்கள்!! தரமான பலரகமான ஆடைத் தெரிவுக்கு!!!

# காவேரி சில்க்ஸ் பெரியகடை, யாழ்ப்பாணம்.

(59683)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளின்ரன் மீது குற்றப்பிரேரணை; நாடாளுமன்ற நீதிக்குழு ஆராய்வு!

நியூயோர்க், ஒக். 6

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனுக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டுவருவது குறித்து ஆராய அமெரிக்க நாடாளுமன்றமான காங்கிரஸின் நீதித்துறைக்குழு நேற்றுக் கூடியது.

கிளின்ரன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் பதினொரு குற்றச்சாட்டுக்கள் அவருக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டு வருவதற்கு ஏற்றவை என்று நீதித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

வெள்ளை மாளிகையின் முன்னாள் பணிப்பெண் மொனிக்கா லுவின்ஸ்கியுடன் முறைகேடான உறவு வைத்துக்கொண்டதாகக் கூறப்படும் விவகாரத்தில் கிளின்ரன் பொய்ச்சாட்சியம் அளித்து நீதித்துறையில் குறுக்கிட்டதும் கிளின்ரன் மீதான குற்றச்சாட்டுக்களில் ஒன்றாகும். இதுவே பிரதான குற்றச்சாட்டாகக் கருதப்படுகிறது.

கிளின்ரன் முதலில் சாட்சியம் அளிக்கையில் மொனிக்கா லுவின்ஸ்கியுடனான தொடர்புகளை மறுத்ததும்—

இரண்டாது தடவையாக சாட்சியம் அளித்தபோது தாம் தொடர்பு வைத்திருந்ததை ஒப்புக்கொண்டதும் தெரிந்தவையே. கிளின்ரன் பாலியல் தொடர்பை ஒப்புக்கொண்டு கடைசியாக வெள்ளை மாளிகையில் அளித்த சாட்சியம் சமீபத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டு பெரும்பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

சுயாதீன வழக்குத் தொடுநர் கென்னத் ஸ்ராரின் அறிக்கையே தற்போது காங்கிரஸின் நீதித்துறைக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

இந்த அறிக்கையை கென்னத் ஸ்ரார் காங்கிரஸில் சமர்ப்பித்திருந்தார்.

நீதித்துறைக் குழுவுக்கு குடியரசுக் கட்சியின் செனட்டர் ஹென்றிஹைட் தலைமை வகிப்பார். குடியரசுக் கட்சி உறுப்பினர்களே காங்கிரஸில் பெரும்பான்மை பலம் பெற்றுள்ளனர்.

இதற்கு முன்னர் குடியரசுக் கட்சி ஜனாதிபதியாக இருந்த ரிச்சர்ட் நிக்ஸனுக்கு எதிராக அமெரிக்க நாடாளுமன்றத்தில் குற்றப் பிரேரணை கொண்டு வரப்பட்டது. (இ-6)

## பின்லாடனின் சகாக்கள் கைது

சர்ச்சைக்குரிய சவுதிக் கோடீஸ்வரர் பின் லாடனின் சகாக்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஏழு பேரை லண்டன் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

லண்டன் முழுவதும் நடத்தப்பட்ட தேடுதலின்போது காலித் அல் பவாஸ் என்பவர் உட்பட 7 பேர் கைதாகினர். (ஐ)

## நாயைவிட கேவலமாக என்னை நடத்தினர்

### அன்வர் முறையீடு

"என்னைக் கைது செய்த பொலீஸார் கிரிமினல் குற்றவாளி போன்று என்னை நடத்தினர் நாயை விட கேவலமாக நான் நடத்தப்பட்டேன்!

மலேசிய உதவிப் பிரதமர் அன்வர் இப்ராஹிம் கோலாலம்பூர் மேல் நீதிமன்றத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அன்வர் மீது பத்துக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

இவற்றில் 5 குற்றச்சாட்டுக்கள் தன்னினச் சேர்க்கை தொடர்பானவை. ஏனைய 5 குற்றச்சாட்டுக்களும் ஊழல் தொடர்பானவை.

இந்த பத்துக் குற்றச்சாட்டுக்களையும் அன்வர் மறுத்தார்.

தமது அரசியல் வாழ்வுக்கு முடிவு காண்பதை நோக்கமாக உயர்மட்டத்தில் உருவாக்கப்பட்ட சதிக்குத் தாம் பலியாகிவிட்டதாக அன்வர் தெரிவித்தார்.

அன்வர் மீதான வழக்கு விசாரணைகள் அடுத்த மாதம் 2 ஆம் திகதி இடம்பெறும் என்று மலேசிய மேல் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணைகள் அடுத்த மாதம் 14 ஆம் திகதி வரையும் இடம்பெறும் என்றும்- அவ்வாறு 14 ஆம் திகதி வழக்கு விசாரணை முடிவடையாவிட்டால் அடுத்த மாதம் 23 ஆம் திகதி விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கும் என்றும்- மேல் நீதிமன்ற நீதிபதி ஒகஸ்ரின் போல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிறையில் வைத்து அன்வர் தாக்கப்பட்டது தொடர்பாக நேற்று முன்தினம் கோலாலம்பூர் மன்னர் அரண்மனைக்கு முன்னால் 500 முஸ்லிம் பெண்கள் அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்தனர். (இ)

## வாழ்த்துகின்றோம்

நெல்லியடி சனசமூக நிலைய
சன்மார்க்க சபைப் பாலர் பாடசாலையில்
அரும்பணியாற்றிவரும் ஆசிரியைகளான
**திருமதி வதனி திருச்செல்வம்**
**செல்வி ஜெயராணி மார்க்கண்டு**
**செல்வி தர்சினி தம்பித்துரை**
ஆகியோரை
உலக ஆசிரியர் தினமான இன்று
சகல பாக்கியங்களும் பெற்று பெருவாழ்வு வாழ வாழ்த்துவதுடன் முருகப் பெருமானின் அருளும் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

நெல்லியடி தடங்கன் புளியடி
முருகமூர்த்தி ஆலய
பரிபாலன சபையினர்.

(கி-5090)

## உலக அரங்கில்

# தமிழகத்தில் சாதிக் கலவரம்; பொலீஸ் சுட்டதில் ஐவர் பலி

தமிழகத்தில் இராமநாதபுர மாவட்டம் திருப்புலானி என்ற இடத்தில் இரண்டு சமூகத்தவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலைத் தவிர்க்க பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு பெண் உட்பட 5 பேர் பலியாகினர். கலவரத்தில் ஈடுபட்டவர்கள் வெட்டிக் கொண்டதில் இருவர் பலியாகினர்.

அயற் கிராமங்களில் இருந்து திருப்புலானிக் கிராமத்துக்குள் புகுந்த குறிப்பிட்ட ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கடைகளைத் தாக்கி சேதப்படுத்தி வன்முறைகளில் ஈடுபட்டதனாலேயே இந்த மோதல் ஏற்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தவன்முறைகள் காரணமாக சுமார் 50 கடைகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் பல வாகனங்களும் எரிக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டில் இதுவரை இடம்பெற்ற சாதிக் கலவரங்களில் இதுவே மிக மோசமானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் தென் மாவட்டங்களில் சாதிக் கலவரங்களைத் தடுப்பதற்கு மாநில அரசு தவறிவிட்டது என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் குற்றஞ்சாட்டி உள்ளார்.

அதே சமயம் தென்மாவட்டங்களில் சாதிக்கலவரங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு வேண்டிய தென் மாவட்டங்களின் பாதுகாப்பை இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும்-

இப்பொழுது இடம் பெற்றுள்ள வன்முறைகளுக்கும் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கும் முதல்வர் கருணாநிதி பொறுப்பேற்க வேண்டும் என்றும் அ. தி. மு. க. பொதுச் செயலர் ஜெயலலிதா தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். (இ-6)

யாழ்ப்பாணம்

## பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கணக்காளர் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் "பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் ப. தெ. வ. அ. கூ. சங்கம், 330, கே. கே. எஸ். வீதி என்ற முகவரிக்கு 20 - 10 - 98 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

1. சம்பளத்திட்டம்

சுற்றறிக்கை இல. 31/97 165/88 — 9
3,200 — 5,200
90 X 10 — 110 X 10

2. வயதெல்லை

25 — 45 சங்கப்பணியாளருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3. தகைமைகள்

1) கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்காளர் / உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் / 11 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்காளர் / உள்ளகக்கணக்காய்வாளர் / கணக்குப் பதிவாளர் / கணக்கு லிகிதர் ஆகிய பதவிகளில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

2) ஐக்கிய ராச்சியத்தில் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதித்தேர்வுடன் அங்கீகரிக்கப்பட்ட வாணிப/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வுத்துறையில் மேற்பார்வை மட்டத்தில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

3) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர (உயர்தரம்), க. பொ. த. (உயர்தரம்) ஆகியவற்றில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தியுடன் கணக்கியல்/கணக்காய்வுத்துறையில் 6 வருடங்களுக்கு குறையாத மேற்பார்வைமட்ட அனுபவம்.

- பொது முகாமையாளர்.

06 - 10 - 98. (சி/5091)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கலைப்பீடம்

முதலாண்டு மாணவர்களுக்கான

## அறிமுக நிகழ்ச்சி

1998 - 99 கல்வியாண்டுக்கான கலைப்பீட முதலாண்டு மாணவர்களுக்குரிய அறிமுக நிகழ்ச்சி நாளை புதன்கிழமை (07-10-1998) காலை 10-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். கலைப்பீட முதலாண்டு மாணவர்கள் யாவரும் இதிலே தவறாது கலந்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

- கலைப்பீடாதிபதி

(சி-5095)

## சர்வதேச ஆசிரியர் தினம் ஒக். - 6

சர்வதேச ஆசிரியர் தின நாளில்
யா/ கரணவாய்
பொன்னம்பல வித்தியாலயத்தில்
கடமையாற்றும்
**அதிபர், ஆசிரியர்களின்**
கல்விச்சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கின்றோம்.
இந்நன்னாளில் வடமராட்சி வலய
கல்விப் பணிப்பாளர்
**திரு. சி. சிவராசா**
அவர்களையும்
தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளராக
பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ள
**திரு. வை. செல்வராசா**
அவர்களையும்
அவர்களது கல்விச்சேவையையும் பாராட்டிக்
கௌரவிக்கின்றோம்.

மாணவர்கள், பெற்றோர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ கரணவாய்
பொன்னம்பல வித்தியாலயம்
கரவெட்டி.

(சி-5089)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென். ஜோன்ஸ் படை உதவி ஆணையாளர்
# அருந்தவராஜா சேவைபாராட்டு மலர்

## அம்மன் அருள்பாலிப்பார்

எமது வசந்த நாசபூஷணி அம்மன்திருவிழா நாள்களில் பக்தர் திரு. க. அருந்தவராஜா அவர் படை செய்து வரும் தொண்டு அளப்பெரியது. இலை போடுவதும் இலை எடுப்பதும் அவர்கள் மனப்பூர்வமாக ஏற்ற கடமை ஆகும். சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் வதிகின்ற எம் பிள்ளைகளுக்கு விளையாட்டு மற்றும் முதலுதவி கற்பித்து வருவார். அவர் சேவை மிளிர அம்பாள் நிச்சயம் அருள்பாலிப்பாராக.

ஏழாலை ஸ்ரீ வசந்தநாக பூஷணி,
அம்மன் தேவஸ்தானம்.

## "சத்யாந் வேஷணம்"

யாழ். மாவட்டத்தில் எங்களைச் சுற்றியிருக்கும் சமூகத்துக்கு கல்வியுலகில் சேவையாற்றுவதே பிரதான பூஜை, முக்கிய தவம் என்ற பெரு நோக்குக் கொண்டவர் எங்கள் ஆசிரியர். மனித ஜென்மம் மிகப் புனிதமானது. தர்மத்தை, சேவையை அனுசரிக்கவே எங்களுக்குத் தேகம் தாப்பட்டுள்ளது. இதை உணர்ந்த எங்கள் ஆசிரியர் நுணுக்கமான கலைகளைக் கற்பிப்பதைச் சேவையாக அர்ப்பணிக்கின்றார்இவ்வாறான ''சத்யாந்வேஷன,,த்தால் தான் எங்கள் ஆணையாளர் தெய்வீகத்தை உணர்கின்றார் போலும். அவர், அவர்தம் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் குடும்பம் வாழ்க என வாழ்த்துகிறோம்

சி பிரதீபா
பிரிவு அத்தியட்சகர்
''இராமநாதன்ஸ்'' படை.

## முதலுதவி விரிவுரையாளர்.

சமுதாய மருத்துவத்துறை, மருத்துவ பீடத்தின் அனுசரணையுடன் நடைபெறும் முதலுதவி வகுப்புக்களை எங்கள் விரிவுரையாளர் திரு. க. அருந்தவராஜா அவர்கள் நடத்துகிறார் என்றால் யாழ். மக்கள் எவ்வளவுதூரம் பெருமையடைய வேண்டும்.

அச்சுவேலி பிரதேசத்திலே முதலுதவி நிலையம் ஆரம்பிக்கவும் எனது பாடசாலையில் அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் சென். ஜோன்ஸ்அம்புலன்ஸ் படை, சாரணீயம், உடற் பயிற்சி அணி வெற்றி பெறவும் கற்பித்தார்.

அச்சுவேலிப் பிரதேசத்தில் முதலுதவி சுகாதார மருத்துவ சீர் முறைகளை எடுத்துக் கூறி வளர்த்த பெருமையும் எங்கள் ஆசிரியர் திரு. க. அருந்தவராஜாவையே சேரும்.

சு. கேதீஸ்வரன்
பிரிவு அத்தியட்சகர்
வெண்புறா, அச்சுவேலி.

## சேவையின் சிகரங்கள

திரு. அருந்தவராஜா ஓர் அருந்தவப் புதல்வன். தனது வாழ்க்கையை தொண்டுக்காகவே பயன்படுத்தும் ஓர் அருந்தவப்பிறவி. சேவை தான் அவர் உயிர். எங்கெங்கே அபாயம் ஏற்பட்டாலும் ஓடோடி வந்து உதவி செய்வார். அவர் பிறஉயிரைத் தன் உயிர்போல் காப்பாற்றும் தகைமையுடையவர். அம்புலன்ஸ் படை, சாரணீயம், அணிநடை ஆகியன அவருடைய சொத்து. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அவருடன் பிறந்தன எனலாம். நலிந்து போன மக்களுக்கு நலன் தரும் சேவை அவர் குறிக்கோள். அவர் குடும்பமே சேவைக்காகவே பிறந்து சேவையில் திளைத்து சேவையே தமது கொள்கை என்று (தமக்கென வாழாப் பிறர்க்குரியவர்களாக) வாழ்பவர்கள். அவர்கள் சேவையின் சிகரங்கள். வாழ்க அவர்கள் என்றும். எமது ஆசிகள்.

பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம்
தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளை.
தலைவர், யாழ் மாவட்ட அரசசார்பற்ற
நிறுவனங்களின் இணையம்

## கல்வி சொல்ல வல்ல நல்லாசான்

கண்ணியமான கடமைகள் பல கட்டணம் பேசும் வர்த்தகமாக மாறிவிட்ட இக்காலத்திலும், தான் பெற்ற அறிவை, அனுபவத்தை, ஆற்றலை, மற்றவர்களுக்கு எவ்வித பிரதிபலனும் எதிர்பாராது வழங்கி வரும் சிறந்த ஒரு ஆசான் [திருவாளர் அருந்தவராஜா அவர்கள்] நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை, விடாமுயற்சி, சேவை செய்வதில் திருப்தி கொண்ட இவர் தன்னை உருக்கி ஒளிவிடும் மெழுகுதிரியாக வாழ்பவர். தான் மட்டுமன்றி தனது குடும்ப அங்கத்தவர்களையும் உடன் இணைத்து பரியோவான் முதலுதவிப்படைக்கு அணி சேர்க்கும் பெருந்தகையாளன். இன்றைய தினத்தில் அவரை மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை

எங்கள் ஆசிரியர் பயிற்றுநர் நல்லாசான்
வழிகாட்டி ''சேவையின் சிகரம்''
எங்கள் நண்பன்

**திரு. க. அருந்தவராஜா**

அவர்களை உலக ஆசிரியர் தினத்திலே
பாராட்டுகின்றோம், வாழ்த்துகின்றோம்.



மாணவர்கள் சேவையிலும் மக்கள்
சேவையிலும் ஒப்பற்ற எங்கள்
ஆசிரியரை வாழ்த்துகின்றோம்.

| | |
|---|---|
| திரு. வேலுப்பிள்ளை பாலேந்திரா ஆலோசகர் | |
| திரு. நாகலிங்கம் குணபாலசிங்கம் | D S O |
| செல்வி தர்மராசா அகிலேஸ்வரி | D S O |
| செல்வி கதிரமலை தயாழினி | D S O |
| திரு. ஆறுமுகம் கிரிசங்கர் | C.S |
| செல்வி சுப்பிரமணியம் ஜெயமலர் | C S |
| செல்வி தங்கராசா விஜிதவேணி | C S O |
| செல்வி கெங்காதரன் தஷிகா | C S O |
| திரு. கந்தசாமி தயாளன் | C S.O |
| செல்வி பாலசுப்பிரமணியம் பாமினி | D S |
| திருமதி மதிவண்ணன் ஜெயந்தி | D S |
| திரு. வைத்திலிங்கம் விஜேந்திரா | D S |
| திரு. தனபாலசிங்கம் குகதாஸ் | D S |
| திரு. ஜெயநாத் திவாகர் | D S |
| திரு. தியாகராசா விமலகுமார் | D S |
| திரு. கந்தையா ஜெகதீசன் | D S |
| செல்வி சங்கரப்பிள்ளை லீலாதேவி | Cordinator |
| திரு. ராமநாதன் ரகுநாதன் | D S |

## காலம் பொன்னானது

தெல்லிநகர் பெற்றெடுத்த அருந்தவப் புதல்வன் சேவையின் உறைவிடமாகத் திகழும் எங்கள் ஆசான் உயர்திரு. க. அருந்தவராஜா பல பாடசாலைகளில் வெளிவாரிப் பிரிவுகளில் மாணவர்களை உருவாக்கி கல்வியுலகில் சேவை உலகையும் அமைத்துத் தனது பணியை யாழ். மாவட்டம் முழுவதும்பரந்துசெயற்படுத்தினார்.

'என்னை எனக்கறிய வைத்தான் எங்கள் குருநாதன். அவனியிலே வாழ வைத்தான் எங்கள் குருநாதன். அன்னை, பிதா குருவானான் எங்கள் குருநாதன் என்ற நற் சிந்தனையைப் போல் எமக்கு பாரினிலே வாழ வழி காட்டிய பெருமை அருந்தவராஜா ஆசிரியரையே சாரும்.

'Every Second Counts' என்பதே இவரது தாரக மந்திரம் அதற்காகவே வாழ்ந்து வழிகாட்டினார். 'எம் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற வாக்கிற்கு அமைய மூன்று தசாப்த காலமாக இப் பாரினில் வாழ்ந்து சேவையுலகில் வழிகாட்டியாக இருக்கும் இவர் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ, பணி தொடர இறைவன் துணை கொண்டு வாழ்த்துகின்றேன்.

சி. கரிகரன் C. S.
சி. சிவயோகப்பிரியா C. S. O.

## அணிபெற நீர் வாழியரோ

மக்கள் பணியதே மகத்தான தென்றெண்ணி
மாண்புடனே காலத்தை மணிபோல்
பாவித்துத்
திக்கெல்லாம் நல்லொழுக்கம் கடமை
கண்ணியம்
தேசமெல்லாம் காத்தே நின்று
மக்களுக்கு வேண்டுபணி மாண்புடனே
மலர்வியக்க
மனமார உழைத்தே நின்ற செல்வ,
சிக்கலோ சிறிதுமின்றிச் சாரண
பயிற்சியெல்லாம்
முறையாகப் போதித்து நின்ற மேலோய்
ஒக்கலுடன் முன்னேற உயர்பணிகள்
சிந்தித்து
ஓயாது உழைத்துவந்த உத்தமனே
பல்லாண்டாய்
அக்கறையாய் நீர்பதித்த முத்திரையோ
அகிலத்தில்
[illegible]
வாழியவே
வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்

## வீறுநடை

அணிநடையை ஆங்கிலம், தமிழில் பயிற்றுவதிலும் கம்பீரத் தொனி, கட்டளை இடுதல் போன்றவற்றிற்கும் நிகர் வேறுயார்?

அளவையூர் கும்பளவாளைப் பிள்ளையார், கீரிமலை, துர்க்கை அம்மன், மாவைக் கந்தன், சந்நிதிக்கந்தன், வல்லிபுர ஆழ்வார், நல்லூர்க் கந்தன் கோயில்களில் பக்தர்களுக்கு முதலுதவி, வீதி ஒழுங்கு, பாதுகாப்பு போன்ற இன்னோரன்ன கடமைகளை வீறு நடையுடன் செய்திடுவார்.

யாழ். மண்ணில் இறைவன் தந்த ஞான ஒளியாகத் திகழும் இவர் பரி. யோவான் படை ஆசானாகப் பல வழிகளிலும் தம்மை அர்ப்பணித்து நாட்டிற்கு ஆற்றிய அவர் சேவையைப் பாராட்டுகின்றோம். ஆசானும் அவர் படைப்பும் இப் பாரினில் வளர்க வளமுடன்.

படை அங்கத்தவர்கள்
வெள்ளைமான்கள்.

## வியத்தகு ஆசிரியர்

அன்பின் உறைவிடமாம் அருந்தவராஜா
பண்பின் இருப்பிடமாம் பாருலகில்
சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைதனில்
ஒப்புயர்வற்ற சேவையாளனாகி
இரவு பகல், மெய் வருத்தம் பாராது
கடமையுணர்வுடன் கண்ணிய சேவையாளனாய்
சாரணீய செஞ்சிலுவை மேம்பாட்டினை
உள்ளடக்கி
நம்மவர் தேவைகருதி நாடளாவிய ரீதியில்
இளந்தலை முறையின் மத்தியில் வியத்தகு
முறையில்
பயிற்சியளித்து தேற்றுவித்து ஆற்றிய
சேவைதனை
எம்மால் மறந்திட முடியுமோ? அவர்களின்
சேவை
தன்னலங்கருதா பொது நல சேவையாக
மேன்மேலும்
வளர்ச்சி பெற்று உயர்ந்தோங்க, எமது நல்
வாழ்த்துக்கள்,
இறைவனின் ஆசி இவர்பால் ஒளிர்வதாகுக

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ சங்கம்.

## வாழ்த்துகின்றோம்

மனிதனின் உயிர்காக்கும் சேவையில் முதற் சேவையாம் முதலுதவிச் சேவையை வேதனமற்ற தன்னிகர் சேவையாக தமிழ் மண் ஆற்றி வரும் அருந்தவராஜாவின் அரும் பெரும் சேவையை மனதார வாழ்த்துகிறோம்.

தென்மராட்சி கிழக்கு
ப. நோ. கூ. சங்கம்
கொடிகாமம்.

## நன்றி மறவோம்!

தென்மராட்சிப் பிரதேசத்தில் தன் வாழ்க்கையை அரும் பெரும் சேவை என எண்ணிய ஒப்புயர்வற்ற சேவையாளனை உலக ஆசிரியர் தினத்தில் கைதடி வெண்நிலா இளம் தளிர்கள் வாழ்த்துகின்றோம். ஆசானே! உங்கள் சேவை கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி, அத்தோடுதேசிய கல்லூரி ஆகிய சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் உமது பணிகளை நாம் அறிவோம்.

முதலில் செய்ய வேண்டியதைமுதலில் செய்' சமகாலத்தில் செய்யவேண்டியதையும் செய்' என எப்படி விளக்குவீர் சேமிப்பு, சிறுதோட்டம், கோழி, ஆடு, மாடு வளர்ப்பை ஊக்குவித்தீர், மறந்திடவும் முடியுமா? நன்றி மறப்போமா ஆசானே! நீர் வாழ்க எம் பிரதேசத்தில் உமது படை வளர வேண்டுகின்றோம், வாயார வாழ்த்துகின்றோம்.

வெண்நிலா படை அங்கத்தவர்கள்,
கைதடி, சாவகச்சேரி.

## தங்கம் தங்கந்தான்

உணவின்றி, தேநீர் இன்றி, உறக்கம் இன்றித் தொடர் கடமையிலும் தானும் கலங்காது மற்றவர்களையும் குழப்பாது நற்றுணிவுடன் வைத்தியசாலை, போக்குவரத்து, கோயில்கள் மற்றும் பல கடமைகளிலும் யார் கேட்டாலும் மறுக்காது தன் மெய்வருத்தம் பாராது அரிய இச்சேவையை ஆற்றிடுவார். எங்கள் ஆணையாளர் எங்களைக் கடமைக்கு அனுப்பிவிட்டு ஓய்ந்திருக்க மாட்டார். அவர் கடமையில் இருக்கும்போது நூறு படை அங்கத்தவர்களின் பலம் கொண்டவராகக் காணப்படுவார்.

இவர் சேவையும் பணியும் தொடர பல வழிகளிலும் உதவி புரியும் பாரியாருக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம்,

க. நளினா,
பிரிவு அத்தியட்சகர்,
வெல்கம் வெளிவாரிப் பிரிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

ஆசிரிய சேவையில் 25 வருடங்களைப் பூர்த்தி செய்த
எமது கல்லூரி ஆசிரியர்

**திரு. க. வேலாயுதம்**

அவர்களைப் பாராட்டுவதுடன் மேலும் கல்வித்துறையில் பல சேவைகள் புரிந்திட வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
கொக்குவில் இந்துக்கல்லூரி.

(59667)



உலக ஆசிரியர் தினம் — ஒக்ரோபர் 06
யா / மானிப்பாய்

## மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

ஆசிரிய தெய்வங்களை

## வாழ்த்துகின்றது

அறியாமை இருளகற்றி அறிவொளி ஊட்டுகின்ற
எம் ஆசிரிய மணிகள் நீடூழி வாழ்க!
ஆசிரியப்பணி மலர்க!

மாணவர்கள், பெற்றோர்,
பழைய மாணவர்கள்.

( 59666 )



யாழ் / ஆனைப்பந்தி

## மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம்

வணங்கி

## வாழ்த்துகின்றோம்

அதிபர், ஆசிரியர்களை நீண்ட ஆயுளும்.
இறை சித்தியும் பெற்று வாழ வேண்டுமென
வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்கள், மாணவர்கள்.

(59662)



யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய

## அதிபர், ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம்

கண்காணாத் தெய்வங்களுக்கு
ஒரு நாள் திருவிழாவாம்
கண்கண்ட தெய்வங்கள் - உங்களுக்கு
ஒரு நாள் திருவிழாவாம் - அது
கனகரத்தின மாணவர்களின் இதய விழாவாம்.

— மாணவர்கள்

(59628)



## சென். ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

**உலக ஆசிரியர் தினம்**
**1998 - 10 - 06**

" எழுத்தறிவித்தவன் இறைவனாவான் "

இன்றைய தினத்தில் எமக்குக் கல்விக் கண்ணைத் திறந்தளித்த எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்களைப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துவதுடன் உலக அனைத்து ஆசிரியர்களையும் மனதார மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

மாணவர்கள், பெற்றோர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யாழ்ப்பாணம்.
( C / 5046 )


## புதிய மாடிக் கட்டடம்

பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தில் புதிதாக மாடிக் கட்டடம் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

அதேவேளை வித்தியாலயத்தின் சேதமடைந்த கட்டடத்தைப் புனரமைக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. (இ-17)

## 3ஆம் ஆண்டு நிறைவு விழா

மந்திகை மருத்துவமனை வளவிலுள்ள மெதடிஸ்த திருச்சபையின் பிரார்த்தனை மண்டப மூன்றாம் ஆண்டு நிறைவு விழா இம் மாதம் 11ஆம் திகதி மாலை 4 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபையின் குருவானவரான அருட் திரு. பி. ஜே. மேதர் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில், பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை கலந்து கொள்வார். (இ-109)

## விளையாட்டு விழாவும் கலை நிகழ்ச்சிகளும்

நெல்லியடி, ஒக. 6

ஆவரங்கால் விவேகானந்தா சனசமூக நிலையமும், இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா, இம் மாதம் 19 ஆம் திகதி தீபாவளித் தினத்தன்று நடைபெறும்.

நிலையத் தலைவர் பொ. கஜேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், கல்வி சார் சம்பந்தமான பேச்சுப் போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (இ-109)

## கல்விக் கல்லூரி நேர்முகப்பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 6

வவுனியா, மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரிக்குப் புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கல்வி வலயம் ஒன்று அலுவலகத்தில் நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று நேர்முகப் பரீட்சைக் குழுத் தலைவரும் வவுனியா கல்விக் கல்லூரி பீடாதிபதியுமான செ. அழகரத்தினம் தெரிவித்தார். (இ-3)

# யாழ். பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள்

## கா. சிவத்தம்பி



தமிழ் ஆய்வு. தமிழ்ப் புலமை என்பனவற்றில் தன்னுடைய காத்திரமான செல்வாக்கினைச் செலுத்தியவரும், ஐம்பதுகளின் பின் நான்கு தசாப்தங்களாக ஆசிரியனாகவும் எழுத்தாளனாகவும் ஆய்வாளனாகவும் புலமையாளனாகவும் இலக்கியவாதியாகவும் விளங்கி தமிழாய்வு உலகுக்கு வளமூட்டியவருமாக விளங்குகிறார் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி.

யாழ்ப்பாணம் வடமராட்சியின் கரவெட்டிக் கிராமத்தில் 1932 ஆம் ஆண்டு வைகாசித் திங்களிலே பிறந்த கார்த்திகேசு சிவத்தம்பி தன்னுடைய தொடக்கக் கல்வியினைக் கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை கொழும்பு சாஹிராக் கல்லூரியிலும் பெற்றார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்திலே (பேராதனை) கலைமாணி, முதுமாணிப் பட்டங்களைப் பெற்ற பேராசிரியர் சிவத்தம்பி பேராதனையில் அக்காலகட்டங்களிலே பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வி. செல்வநாயகம், பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் ஆ. சதாசிவம் ஆகியோருடைய தொடர்பினால் தன்னுடைய அறிவு வளர்ச்சியிலே இன்னொரு பரிமாணத்தைப் பெற்றுக் கொண்டார்.

பட்டதாரியாகிய பின்னர் சாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகவும், நாடாளுமன்றத்தில் சமகால மொழிபெயர்ப்பாளராகவும் பணிசெய்து, 1965இல் இவர் வித்தியோதய (தற்போது ஸ்ரீஜெயவர்தனபுர) பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார்.

பேராசிரியர் சிவத்தம்பி பெர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் மூன்று ஆண்டுகள் உலகப் புகழ் பெற்ற கிரேக்கப் புலமையாளராகிய பேராசிரியர் தொம்சனின் வழிகாட்டலில் பட்டப்பின் படிப்பினை மேற்கொண்டார். பண்டைய தமிழ் நாடகம் பற்றிய இவருடைய ஆய்வுக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. இந்த ஆய்வேடு பின்னர் Drama in Ancient Tamil Society (பண்டைய தமிழ்ச்சமூகத்தில் நாடகம்) எனும் நூலாக வெளிவந்தது. பலர் மேற்கோள் காட்டும் உசாத்துணையாக அமையும் இந்நூலை அவருடைய மிக முக்கியமான ஆக்கமெனக் கருதலாம்.

ஏற்கனவே இணைப் பேராசிரியராகவிருந்த அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பின்னர் 1984 இல் பேராசிரியராக (திறமை அடிப்படையில்) பதவி உயர்வு பெற்றார். 1994இல் முதுநிலைப் பேராசிரியரானார். அவர் நுண்கலைத் துறைத் தலைவராயிருக்கும் பொழுது "நாடகமும் அரங்கியலும்" என்னும் கற்கை நெறியினையும் அத்துறையின் பாடவிதானத்திலே சேர்த்தார். இராமநாதன் நுண்கலைக் கழகமும் இவருடைய வழிகாட்டலைப் பெற்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கா. கைலாசநாதக்குருக்கள்



பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் 1921 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 15 ஆம் நாள் யாழ்ப்பாணம் நல்லூரிலே பிறந்தார். யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் உயர் பள்ளிக் கல்வியினைப் பெற்றதோடு வியாகரண சிரோமணி தி. கி சீதாராம சாஸ்திரிகளிடம் வரன் முறைக் கல்வியினையும் பெற்றவர்.

இலங்கைப் பல்கலைக் கழகத்திலே உலகப் புகழ்பெற்ற பேராசிரியர் Betty Heimann அவர்களிடம் சமஸ்கிருதக் கல்விபெறும் வாய்ப்புப் பெற்றார், 1948 ஆம் ஆண்டு சமஸ்கிருதத்தைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு கலைமாணிப் பட்டத்தினையும், 1950 ஆம் ஆண்டு முது கலைமாணிப் பட்டத்தினையும் இலங்கைப் பல்கலைக்கழகத்திலே பெற்றார். பேராசிரியர் ஆர். என். தாண்டேசர் அவர்களின் வழிகாட்டலில் இதிகாச புராணங்கள் கூறும் சைவம், சைவக கிரியைகள் பற்றி இவர் மேற்கொண்ட ஆய்வுக்கு இந்திய பூனே பல்கலைக்கழகம் 1960 ஆம் ஆண்டு இவருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கியது.

பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருத விரிவுரையாளராக நியமனம் பெற்று 35 வருடங்களுக்கு மேலாகப் பல்கலைக்கழக ஆசிரியப் பணியை மேற்கொண்டவர். 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாண வளாகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இந்து நாகரிகத்துறையின் முதற் பேராசிரியராகவும், தலைவராகவும் நியமனம் பெற்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உயர்புலமைத்துவத்தின் மையமாக இந்துநாகரிகத்துறை முதன்முதலாக உருவாக்கப்பட்ட போது அத்துறையின் தலைவர் என்ற நிலையில் பல்கலைக்கழக பட்டப் பயிற்சி நெறிகளுக்கான இந்துநாகரிகப் பாடத்திட்டத்தினை உருவாக்குவதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர். பட்டப்பின் ஆய்வினை நெறிப்படுத்துவதிலும் இவர் பெரும் பங்கு கொண்டார்.

இந்து நாகரிகத்துறையினூடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது கலாநிதிப் பட்டதாரியை 1982 ஆம் ஆண்டு உருவாக்கிய பெருமை இவரையே சாரும். இவரது வழிகாட்டலில் இத்துறை உன்னத வளர்ச்சி கண்டது. பல்கலைக்கழகத்தில பல்வேறு நிலைகளில் பணியாற்றிய பின் இவர் 1986 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

இந்து நாகரிகத்துறையில் கலைக்கூடம் ஒன்று உருவாவதற்குப் பெரிதும் ஆர்வங் காட்டிய பேராசிரியர் அவர்கள் அதற்கான பூர்வாங்க முயற்சிகளையும் மேற்கொண்டார். 1987 ஆம் ஆண்டு இளம் சிவாச்சாரியர்களின் பயிற்சி

(6ஆம் பக்கம் பார்க்க)


உ

## பூப்புனித நன்னீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!
திகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் புரட்டாதித் திங்கள் 22 ஆம் நாள் [ 08 - 10 - 1998 ] வியாழக்கிழமை காலை 10. 00 மணி முதல் 11. 00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரி திருநிறை செல்வி
★ **சசிகலா** ★
அவர்களுக்கு

பூப்புனித நன் நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து செல்வியை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை நாடும்.

திரு சி. தனபாலசிங்கம் [தந்தை]
திருமதி வீ. சின்னப்பிள்ளை [அம்மம்மா]

புலோப்பளை கிழக்கு,
பளை.

(59629)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேற முயன்ற படையினருடன்
# மாங்குளத்தில் புலிகள் மோதல்

கொழும்பு, ஒக். 6

'வெற்றி உறுதி' துருப்பினர் புதிதாகக் கைப்பற்றிய பகுதிகளில் இருந்து கடந்த சனிக்கிழமை வடக்கு நோக்கி முன்னேறிய சமயம் புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

படையினர் பதில் தாக்குதல் நடத்தி புலிகளின் தாக்குதலை முறியடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மாங்குளத்துக்கு வடமேற்கே விடுதலைப் புலிகள் வைத்திருந்த தடைகளை துருப்பினர் அப்புறப்படுத்தியதுடன் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகளின் ஆறு உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும்—

ஐந்து ரி-56 ரகதுப்பாக்கிகளைப் படையினர் கைப்பற்றினர் எனவும்—

ஒலுமடு, குறிசுட்டான் குளம் ஆகிய பகுதிகளுக்கு வடமேற்கே துருப்பினர் தேடுதல் நடத்திய போது ஐந்து கிளைமோர் குண்டுகளையும், தாங்கி எதிர்ப்பு கண்ணிவெடி, மூன்று மிதி வெடிகள் ஆகியனவற்றையும் கண்டெடுத்தனர் என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-9)

## சரக்குக் கப்பல்களில் பயணிகள் திருமலைக்கு

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ்ப்பாணத்துக்கு வந்து திரும்பி கொழும்பு செல்ல முடியாத நிலையில் உள்ளவர்களை சரக்குக் கப்பல்கள் மூலம் திருகோணமலைக்கு அனுப்ப யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து விடுமுறையில் வந்தவர்களும், சொந்த விடுமுறையில் யாழ். வந்த அரச ஊழியர்களும், யாழ். அரச அதிபரிடம் போக்குவரத்து வசதி செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

தற்சமயம் பருத்தித்துறையில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள கப்பல்கள் பொருள் இறக்கி முடிந்து திரும்பும்போது இவர்களை அக்கப்பல்களில் திருகோணமலைக்கு அனுப்ப அனுமதி தருமாறு அரச அதிபர் கொழும்பு அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

இதற்கான அனுமதி கிடைத்ததும், விமான டிக்கட்டை வைத்திருப்பவர்கள் கப்பலில் அனுப்பப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலும் அடுத்த வாரம் இச்சேவை இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-3-21)

## தண்டப்பணம் அறவிட முடிவு

மானிப்பாய், ஒக். 6

கட்டாக்காலிக் கால்நடைகள் வயல் வெளிகளில் காணப்பட்டாலோ, வயல் வெளிகளில் கட்டி மேய விடப்பட்டாலோ அதன் உரிமையாளர் மீது பிடிகூலி, குற்றப்பணம், பராமரிப்பு, பயிரழிவு என்பவற்றுக்கு தண்டப்பணம் அறவிடப்படவுள்ளது.

இவ்வாறு மானிப்பாய் வடக்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி. இரத்தினசிங்கம் தெரிவித்துள்ளார்.

(இ-90)

## நிதி ஒதுக்கீடு

நெல்லியடி, ஒக். 6

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு அகதிகளுக்கான ஐந்நூறாயிரம் பத்து இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

பங்கீட்டு அடிப்படையில் கடனாக வழங்கப்படும் இந்த நிதி மூலம் கடற்றொழிலாளர் கள் வலைகளைக் கொள்வனவு செய்து தமது தொழிலை விஸ்தரிக்க முடியுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-109)

## படையினர் பயணம்செய்த டிராக்டர் மீது தாக்குதல்
### திருமலையில் இருவர் பலி

மட்டக்களப்பு, ஒக். 6

திருகோணமலை தென்னமரவாடி—பதவியா வீதியில் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் இரு படையினர் பலியானார்கள்.

தென்னமரவாடியிலிருந்து பதவியா மாவட்ட வைத்தியசாலையை நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ டிராக்டர் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

பலியான படையினரில் ஒருவர் நோயாளி என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-21)


SMK

மக்கள் மனதில் தமக்கென ஒரு நீங்காத இடம்பிடித்த

**வீடியோ கலா மினி**

தமது சேவையை விரிவுபடுத்தும் நோக்குடன் சிங்கப்பூரில் இருந்து புதியரக மிக்சர்கள், புத்தம்புதிய கமராக்களை வரவழைத்து திறம்பட நடத்தி வருகின்றார்கள்.

**பூப்புனித நீராட்டு விழாவிற்கென்றே விசேடமாக அமைக்கப்பட்ட**

★ சுழல் தாமரை ★ சுழல் ராட்டினம் ★ மாடிப்படி செற்
★ பலவர்ணக் குடைகள் ★ சுழல் நட்சத்திரம்
★ அன்னஊஞ்சல் ★ பிறை

போன்ற பிரமாண்டமான செற் அமைத்து படப்பிடிப்புக்கு அழகு மிளிரச் செய்து வருகின்றார்கள்.

காட்சிகளுக்கேற்ப பலவர்ண ஆடைகள் மாற்றிப் படம் பிடிப்பதற்கென்றே எமது ஸ்தாபனத்தில் பூங்கா வசதியும் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

28 - 10 - 98 இல் புதிதாக அமைக்கும் இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகள் அமைந்த 3 மின் விசிறிகள், பலவர்ண மின்குமிழ்கள், 100 பிளாஸ்ரிக் கதிரைகள், சிறுவர்களுக்கான 20 பிளாஸ்ரிக் கதிரைகள் ஆகியவற்றுடன் உங்கள் இலலங்களின் அழகுக்கேற்ப T, X, L, M, வடிவங்களில் 110 அடி நீரோடி சொக்கட்டான் மணப்பந்தல் வாடகைக்கு விடவிருக்கின்றார்கள்.

ஓடர்களுக்கு முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

**வீடியோ கலா மினி**

அச்சுவேலி.

யாழ். நகரில் தொடர்புகளுக்கு!

**கல்யாணி**

பஸ்நிலையம் முன்புறம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(59568)


## சிவத்தம்பி...

(5 ஆம் பக்கத் தொடர்)

றுப் பயனடைந்தது.

ஆய்வாளராகவும், புலமையாளராகவும் பேராசிரியர் சிவத்தம்பி ஈடிணையற்ற பல சாதனைகளைச் செய்துள்ளார். அவருடைய ஆய்வு முயற்சிகள் தமிழ் ஆய்வின் பல பகுதிகளாகிய தமிழர் இலக்கிய வரலாறு, இலக்கிய திறனாய்வு, தமிழரின் சமூக வரலாறு, தமிழ் நாடகம், பண்பாடு, தொடர்பாடல் என்பவற்றிலே செறிந்திருந்தன. நீண்டகாலமாக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஆங்கிலத்திலும், தமிழிலும் பெருந்தொகையான எழுத்தாக்கங்களை வெளியிட்டார். அவருடைய அறிவுத் திறனையும் புலமைத் திறனையும் நிலை நாட்டும் நூற்றுக்கு மேற்பட்ட எழுத்தாக்கங்களைக் (ஜனரஞ்சக எழுத்துக்களை விடுத்து) கொண்ட நீண்ட பட்டியல் உளது. தற்கால இலங்கைத் தமிழ் ஆய்வில் தனக்கென ஓர் இடத்தை வகுத்துக் கொண்டார். அவருடைய பெரும்பான்மையான எழுத்துக்களில் (மறைந்த பேராசிரியர் கைலாசபதியின் எழுத்துக்களைப் போல) "சமூகவியற் பரிமாணம்" அல்லது "சமுதாயப் பரிமாணம்" செறிந்து இருந்தது. இலக்கிய தமிழ் வரலாற்று எழுத்துக்கள் இத்தகைய அணுகுமுறையாலே சிறப்புப் பெறுகின்றன.

பேராசிரியர் சிவத்தம்பி தந்தக் கோபுரப் புலமையாளரல்லர். சமூகத்திற்கும் புலமையாளருக்குமிடையே நெருக்கமான தொடர்பு இருக்கவேண்டுமென நம்பினார். பல்கலைக்கழக வளாகத்தினுள்ளும் வெளியிலும் இலக்கிய, பண்பாட்டு நிறுவனங்களில அவருடைய செயற்பாடுகள் ஊடாக அத்தகைய தொடர்புப் பாலமாக அவர் விளங்கினார். அரசசார்பற்ற நிறுவனங்கள், மக்கள் குழுக்கள் ஆகியவற்றிலிருந்த தொடர்புகள் அவரை மிகப் பிரபலமான ஒரு பிரமுகராக ஆக்கின.

பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்ட பேராசிரியர் சிவத்தம்பி மிகப் பிரசித்தி பெற்ற நிறுவனங்களாகிய சென்னைப் பல்கலைக்கழகம், உப்சாலாப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகம், கேம்பிறிஜ் பல்கலைக்கழகம், தென்னாசிய ஆய்வு மையம், கலிபோர்னியாப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு வருகைப் பேராசிரியராகவோ, விருந்துப் பேராசிரியராகவோ அழைக்கப்பட்டுள்ளார்.

அவருடைய புலமை நிலையும் திறனும் அவரை பிலிப்பீன்ஸ், சோவியத்ரஷ்யா, ஹங்கேரி, இந்தியா, பாகிஸ்தான், நியூயோர்க், சிங்கப்பூர், ரொரன்ரோ போன்ற நாடுகளில் நடைபெற்ற மாநாடுகளுக்குக் காலத்துக்குக் காலம் இட்டுச் சென்றுள்ளன. கடல் கடந்த இப்பயணங்கள் மிகப்பிரபலம் வாய்ந்த அறிஞர்களுடனும் சமூக அறிவியலாளர்களுடனும் இவருடைய புலமை ஊடாட்டம் நடைபெறுவதற்கு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தின.

பல்துறைப் புலமையாளரும், இலங்கைத் தமிழ் இலக்கியக் களத்திலே மிக மூத்த அறிஞருமாகிய பேராசிரியர் சிவத்தம்பி பல சாதனைகளை ஈட்டி உள்ளார். அவருடைய புலமையும் அறிவுத் திறனும் அவரின் மாணவர்கள், சக புலமையாளர்கள், தமிழ் இலக்கிய வாதிகள், பொது மக்கள் ஆகியோருடைய மதிப்பினைப் பெற்றுள்ளன.

- பேராசிரியர் நா. பாலகிருஸ்ணன்

## கைலாசநாதக்குருக்கள்...

(5 ஆம் பக்கத் தொடர்)

நெறிக்கென ஸ்ரீவித்யா குருகுலமொன்றினை நிறுவினார்.

சம்ஸ்கிருத புலமைக்காக பேராசிரியர் அவர்கள் காஞ்சிகாமகோடி பீடாதிபதி அவர்களின் கௌரவத்திற்குரியவரானார். 1993 ஆம் ஆண்டு இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு "வேதாகம மாமணி" என்ற பட்டத்தை வழங்கியும் தமிழ்நாட்டில் சென்னை அழகப்பா கல்லூரி சிவநெறிக் கழகத்தினர் "சிவாகமஞானபானு" என்ற பட்டத்தை வழங்கியும் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அவர்களைக் கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில் பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் பல்வேறு கல்விசார் மற்றும் பண்பாட்டு நிறுவனங்களோடு தொடர்புபட்டு செயற்பட்டவர். உலக இந்து மாநாடுகளில் தலைமையேற்று பல அமர்வுகளில் ஆர்வமுடன் பங்கு கொண்டவர். 1978 ஆம் ஆண்டு அவ்வமைப்பின் இலங்கைக்கான செயலாளர் நாயகமாக நியமனம் பெற்றவர். சென்னை குப்புஸ்வாமி சாஸ்திரி ஆய்வு நிறுவனத்தில் ஆகமக் கிரியைகள் பற்றிய விரிவுரைகள் நிகழ்த்தியுள்ளார்.

பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் தமது அரிய முயற்சியினால் பல நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார்.

பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அவர்களது சமயப் பணி பல்கலைக்கழகத்திற்கு வெளியிலும் விரிவடைந்தது. ஆலயக்கிரியைத் துறையில் தனக்கென ஒரு பாணியை ஏற்படுத்திக் கொண்டவர் பேராசிரியர் அவர்கள். கிரியைத்துறையில் சிவாச்சாரியர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்கி வருகின்றார். ஆலயந் தொடர்பான விடயங்களில் தக்க ஆலோசனைகள் வழங்கும் புலமைமிக்கவராகவும் பேராசிரியர் அவர்கள் திகழ்கின்றார்.

- பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்.


**வாழ்த்துகின்றோம்**

உலக ஆசிரியர் தினம் - 06 - 10 - 1998

எமது பாடசாலை அதிபர் திரு. யே. யேசுதாசன் அவர்களையும், ஆசிரியர்கள் அனைவரையும் சகல சிறப்புக்களையும் பெற்று தமது கல்விப்பணியைத் தொடர வேண்டுமென உலக ஆசிரிய தினமாகிய இன்று மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பாடசாலை மாணவர்கள்.

யா/ நாவாந்துறை றோ. க. வி.
யாழ்ப்பாணம்.

(59669)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஆசிரியர் தினம்

இன்று அனைத்துலக ஆசிரியர் நாளாகும். ஆசிரியர்களுக்கு உள்ள உரிமைகளையும் அவர்களின் பொறுப்புகளையும் உணர்த்தும் நாளாக இது அனுஷ்டிக்கப்படுகிறது. எமது நாட்டில் ஆசிரியர்களைக் கௌரவித்துப் பாராட்டும் நிகழ்வுகளே இன்று நடைபெறுகின்றன.

தமிழர் சமூக மரபுகளின் பிரகாரம், குரு என்று முன்னர் அழைக்கப்பட்ட ஆசிரியர்கள், ஆசான்கள் தெய்வமாகவே மதிக்கப்பட்டனர். ஒருவனது வாழ்வில் அறிவொளி பரப்பும், அவனது வாழ்க்கைக்கு வழிகாட்டும் பெரும் பொறுப்பை ஆசான்கள் ஏற்றிருந்தனர்.

மாணவனுக்கு அறிவு ஊட்டுபவனாகவும், சகல வழிகளிலும் அவனுக்கு முன்னுதாரணமாக விளங்குபவனாகவும் ஆசிரியன் விளங்கினான். அதே போன்று சிஷ்யன்–மாணவன் — ஆசிரியனுக்குப் பணிந்து நடப்பவனாகவும், மதிப்பளிப்பவனாகவும் அவனைப் பின்பற்றுபவனாகவும் மிளிர்ந்தான். குரு–சிஷ்ய உறவு மிக அன்னியோன்னியமானதாகவும் இறுக்கமானதாகவும் இருந்தது.

ஆனால் இன்று ஆசிரியர் மாணவர் ஆகிய இரண்டு தரப்புகளிலும் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அந்த மாற்றங்கள் கல்வி வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டுக்கும் பாதகமானவையாகவே உள்ளன. அறிவார்ந்த, பண்புடைய சமூகத்தைச் சிருஷ்டிப்பதற்கு குந்தகமான மாற்றங்களே மலிந்துள்ளன.

ஆசிரியர் — மாணவர் உறவும் நலிந்து போயிற்று. மாணவர் நலனில் அக்கறையுடன், உண்மையான அர்ப்பணிப்புடன் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. கல்வியை வர்த்தகப் பொருளாக்கி, மாணவர்களின் எதிர்காலத்தில் அக்கறையின்றி, தமது சமூகப் பொறுப்பை உணராது தமது தொழிலின் மகத்துவத்தையும் மதிப்பையும் ஆசிரியர்கள் இறக்கிவிடும் தன்மை கவலைக்குரியது.

ஆசியர்கள் சமூகச் சிற்பிகள். அவர்களுக்கு உரிய அந்தஸ்தும், கௌரவமும், மதிப்பும் அளிக்கப்படுவது மிக மிக அவசியம்.

மதிப்பும் மரியாதையும் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளப்பட்டாலேயே வளரக் கூடியவை. இதனை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகிய முத்தரப்பினரும் நடைமுறைக்குக் கொண்டு வருதல் இன்றைய தேவையாகும்.

ஆசிரியர் தினக் கொண்டாட்டமும் நிகழ்வுகளும் இந்தக் குறைபாடுகளையும், குழப்பங்களையும் செயல் மாற்றங்களையும் உணர்த்துவனவாகவும் ஊக்குவிப்பனவாகவும் அமைதலும் அவசியம்.

ஆசிரியர்களுக்கு மதிப்பளியுங்கள், அவர்களைக் கௌரவியுங்கள். ஆசிரியர்களே! அர்ப்பணிப்புடன் மாணவர்களை உங்கள் பிள்ளைகளாகவே கருதி கல்வியையும் பண்பையும் ஊட்டுங்கள். அப்போது சிறந்த அறிவார்ந்த, மதிப்பார்ந்த சமூகம் உருவாகுவது திண்ணம்.

# நல்லாசிரியர் எண்ணிக்கை உயர்வதற்கு கௌரவித்து ஊக்கமளிப்பது அவசியம்

இந்துசமய பாரம்பரியத்தில் மிகச் சிறப்பான இடம் குருவிற்கு வழங்கப்பட்டு வந்துள்ளது. குருவிடம் கல்வி கற்ற மாணாக்கர் மட்டுமல்ல சமுதாயத்தில் உள்ள அனைத்துப்பிரிவினரும் குருவிற்கு தனி இடம் கொடுத்து அவரை மதித்து வந்துள்ளனர்.

குரு – சிஷ்யர் என்ற நிலை மாறி ஆசிரியர் – மாணவர் என்ற வகையிலே இன்று உறவு காணப்படுகின்றது. இங்கே குருவும் ஆசிரியரும் ஒரே செயற்பாட்டை நிறைவேற்றுபவர்கள் – அதாவது அறிவை புகட்டுபவர்கள் என்று மேலோட்டமாக கூறினாலும் குருவினுடைய பாத்திரப் படைப்பிற்கும் அவருடைய செயற்பாடுகளுக்கும் ஆசிரியருடைய பாத்திரப்படைப்பிற்கு அவருடைய செயற்பாடுகளுக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. குரு தன்னுடைய மாணவர்களுக்கு அறிவைப் புகட்டியது மட்டுமன்றி தனது வாழ்க்கை

## ஆசிரியர்- மாணவர் உறவுகளில் உள்ள குழப்பநிலை நீக்கப்பட வேண்டும்

முறையால், தனது முன்மாதிரியினால், தனது எடுத்துக்காட்டுக்களினால் தனது மாணவர்கள் தன்னைப் பின்பற்றி செயற்படுமாறு நடந்து கொண்டார்.

ஆனால் ஆசிரியர் என்ற பாத்திரத்தை இன்று வகிப்பவர்கள் மாணவர்களுக்கு அறிவைப்புகட்டினாலும் குருவினுடைய, மாணாக்கரை பின்பற்றச்செய்யும் அம்சங்களை முழுமையாக செயற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. அதற்குப் பலகாரணங்கள் இருக்கலாம். ஆனால் நல்ல ஆசிரியர் என்று கல்வியியலாளர்களும், சமூகமும் எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் குருவினுடைய பெருமளவு இயல்புகளை தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும் என்று, இன்றும் சமுதாயம் எதிர்பார்ப்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்களாக நாட்டை வழிநடத்தப் போகின்றார்கள். ஆகவே இந்த மாணவர்களுக்கு நல்ல அறிவும் ஆற்றலும் மட்டும் இருந்தால் போதாது. நல்ல பண்பும், நடத்தையும் அவசியம் என்பதை எமது சமுதாயம் மட்டுமன்றி, சர்வதேச சமுதாயமே ஏற்றுக்கொள்கின்றது.

ஆகவே ஆசிரியர்கள் தனியே அறிவை மட்டும் புகட்டுவதுடன் நின்றுவிடாது ஒழுங்கு, ஒழுக்கம், பெரியோரை மதித்தல், நல்ல பழக்கவழக்கம் மற்றும் தேசப்பற்று போன்ற அம்சங்களையும் மாணவர்களுக்கு ஊட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய எதிர்பார்ப்புக்களை எமது ஆசிரியர் சமூகம் அண்மைக் காலம் வரை சிறப்பாக நிறைவேற்றி வந்துள்ளதை மறந்துவிட முடியாது.

### நிறுவன ரீதியானது

எமது நாட்டில் ஐரோப்பியருடைய வருகையைத் தொடர்ந்து கல்வியின் நோக்கமும், கல்விச் செயற்பாடுகளும் மாற்றமடையத் தொடங்கியதுடன் கல்வி நிறுவன ரீதியான அமைதிக்குட்பட்டதாகவும் மாற்றமடைந்தது. இங்கே குரு வகித்த பாத்திரத்தை ஆசிரியர் வகிக்கத் தொடங்கினார். ஆனாலும் குருவினுடைய இயல்புகள் பலவற்றை ஆசிரியரும் பின்பற்றி வந்தமை மிகவும் வரவேற்கத்தக்க ஓர் அம்சமாக விளங்கியது.

இவ்வாறு கல்வித்துறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டு வந்தாலும் ஆசிரியத் தொழில் சேவை நோக்கம் கொண்ட தொழிலாகவே எமது சமுதாயத்தில் பின்பற்றப்பட்டு வந்தமையால் நல்ல ஆசிரியருக்குரிய பண்புகள் அதிகமான ஆசியர்களிடம் தொடர்ந்தும் காணப்பட்டு வந்தன.

ஆனால் தற்பொழுது ஆசிரியத் தொழிலை புனிதமான தொழிலாக நினைத்துச் செயற்படுகின்ற தன்மையும், புனிதமான தொழிலாக நினைத்துச் செயற்படுகின்றவர்களின் எண்ணிக்கையும் அளவில் குறைந்திருப்பதை மறக்கமுடியாது.

பாடசாலைக் கல்வியுடன் தனியார் கல்வியும் சமூகத்தில் இடம் பெற்றிருக்கின்ற இன்றைய சூழலில் ஆசிரியர் — மாணவர் உறவு எப்படிப்பட்டதென்று கூறுவது கடினமாகவே உள்ளது. இது சமகால அபிவிருத்திய

**ந. அரியரத்தினம் (B.Ed)**

டைந்த ஐரோப்பிய நாடுகளில் உள்ள உறவைவிட மோசமானதென்றே கருதத் தோன்றுகிறது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஆசிரியர் — மாணவர் உறவு இரு நண்பர்களுக்கிடையே உள்ள உறவு போல காணப்படுகிறது. இதனால் ஆசிரியர்கள் மாணவர்களை கடுமையாகக் கண்டிப்பதற்கோ அல்லது தண்டிப்பதற்கோ வாய்ப்பில்லை.

ஆனால் ஆசிரியர்— மாணவர் நெருக்கமான உறவு கல்வியின் நோக்கங்களை அடைவதற்கு ஒரு சாதகமான அம்சமாக உள்ளது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் தற்பொழுது ஆசிரியர் — மாணவர் உறவு நெருக்கமற்றதாகவும், சந்தேகப் பார்வை உடையதாகவும், உறுதியான அன்போ, உறுதியான கண்டிப்போ அற்றதாகவும் உள்ளது. இத்தகைய ஒரு குழப்பமான ஆசிரியர் — மாணவர் உறவு கல்வியின் நோக்கங்களை அடைவதற்கோ அல்லது எதிர் காலத்தில் நற்பிரஜைகளை உருவாக்குவதற்கோ எந்த வகையிலும் பயன்படப் போவதில்லை.

இன்று பல்வேறு துறைகளில் சமுதாயத்தில் உயர் நிலையில் இருக்கின்ற பெரியோர்கள் பலர் தமது காலத்தில தமக்குப் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக இருந்து கல்வியுடன் சேர்த்து, நல்ல பழக்க வழக்கங்களையும் போதித்தனர் என்பதை நன்றியுடன் நினைவு கூருகின்றனர். தாம் ஆசிரியர்களைத் தெய்வங்களாகவே மதித்ததாகவே அவர்கள் கூறுகின்றனர். இத்தகைய கருத்துக்களை இன்று ஆசிரியத் தொழிலை மேற்கொள்வோர் கருத்தில் எடுத்துச் செயற்படுவது விரும்பத்தக்கது.

### குருபக்தி

அயோத தௌமியர் என்ற குருவினை நாடிப் பலதரப்பட்ட மாணவர்கள் குருகுலத்திற்குச் சென்று கல்வி கற்று வந்தனர். அவர்களில் ஆருணி என்ற பாஞ்சால ராஜகுமாரனும் ஒருவனாக விளங்கினான. ஒரு நாள் அவனிடம் குருநாதர் "ஆருணி நமது குலத்திற்குச் சொந்தமான வயலில் தண்ணீர் பெருகிப் பயிரை அழிக்கின்றது. அதனால் நீ போய் மடையை அடைத்து வா" என்று கட்டளையிட்டார்.

ஆருணி பெரும் செல்வத்தில் பிறந்து செல்லமாக வளர்ந்து அரச குமாரனாக இருந்தாலும் குருநாதருடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு மண்வெட்டியைத் தூக்கிச் சென்று மடையை அடைக்க முயற்சிக்க அது முடியாது போகவே இறுதியில் தானே தண்ணீரை எதிர்த்து மடையில் படுத்துத் தண்ணீரைத் தேங்கச் செய்தான். பின்பு இரவு சென்றும் திரும்பாத ஆருணியை, குருநாதர் வயலுக்குத் தேடிச்சென்று மீட்கும் நிலை ஏற்பட்டது. இங்கே ஒரு தூய மாணவனின் உயர்ந்த குருபக்தி வெளிப்படுகின்றது.

இத்தகைய ஒரு புனிதமான, உயர்வான ஆசிரிய–மாணவ உறவுகளே எமக்கு இன்று அவசியமாக உள்ளது. இந்த உறவுகள் இன்று பெருமளவு மாற்றமடைந்து விட்டாலும் இலைமறைகாயாக நல்ல ஆசிரியர்களாக செயற்பட்டுக் கொண்டிருப்பவர்களை இனங் கண்டு அவர்களைக் கௌரவித்து எமது முன்னோர்களால் சமுதாயத்தில் எந்தளவு உயர்ந்த இடம் வழங்கப்பட்டதோ அதே அளவு உயர்ந்த இடத்தை இன்று சமுதாயத்தில் உள்ள அனைத்துப் பிரிவினரும் வழங்குவதன் மூலம் நாம் அவர்களை மேலும் ஊக்கப்படுத்த முடியும்.

அத்துடன் நல்ல ஆசிரியர்களின் எண்ணிக்கையை மேலும் சமுதாயத்தில் அதிகரிக்கவும் இது காரணமாக அமையும். உலக ஆசிரியர் தினத்தின் ஒட்டுமொத்தமாக ஆசிரியர் சேவையின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு ஆசிரியர் சமுதாயத்தை கௌரவிக்கின்ற அதே நேரம் நல்ல ஆசிரியர்களை இனங் கண்டு அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதும் அவசியம்.

ஒக்ரோபர் ஆறாந் திகதி உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. இது உலகளாவியதாக தொழில் ரீதியாக உலக ஆசிரியர்களை ஒன்றிணைக்கின்ற தினம் என்று மட்டும் மேலோட்டமாகக் கருதிவிட முடியாது. மனித சமுதாயம் இனரீதியாகவும், மொழிரீதியாகவும், மதரீதியாகவும் பிரதேசரீதியாகவும் மட்டுமல்ல பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்ற ரீதியில்கூட வேறுபாடு நிறைந்த உலகமாக காணப்படுகிறது. இத்தகைய வேறுபடுகள் அனைத்தையும் கடந்து கல்வித்தாய் என்ற அன்னையின் மூலம் உலக சமுதாயம் முழுவதும் வேற்றுமையில் ஒற்றுமை காணுகின்ற ஒரு திருநாளாகவே இதனைக் கருதவேண்டும்.

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## உம்பாதம் போற்றுகிறோம்!

அகிலத்தை உதயமாக்கும் இரவிகளே
அன்பு சேர் முத்துக்களே
பூநகைத் தடாகங்களே
அறியாமைச் சுமை களைந்த ஆசான்களே
போற்றுகின்றோம் போற்றுகின்றோம்
உம்பாதம் போற்றுகின்றோம்.

யோ. தர்சினி
(யாழ் திருக்குடும்ப கன்னியர்மடம்)

## ஆசிரியம் காப்போம்!

எழுச்சியின் திறவு கோலாய்
எண்ணத்தின் நாற்றங்காலாய்
விழிப்புறும் தாயகத்தின்
விடிவெள்ளித் தூதாய் — தமிழர்
தொழுகின்ற இறையாய்! வாழ்வின்
தொலைக் நூலாய்! ஏழைத்தோழன்
அழுகையை அழித்த பாட்டாய்
அவனியில் ஆசிரியம் காப்போம் வாரீர்.

மதுரகவி காரை எம் பி. அருளானந்தன்

## குருநாதர்களை வழிபடுவோம!

பாரிலுள்ளோர் அனைவருமே
பக்தியுடன் போற்றி
நேயமுடன் அவர் சேவை
நெஞ்சங்களில் இருத்தி
ஏணிப்படி போலிருந்து
எம்மை உயர்வித்த
எங்கள் குரு நாதர்களை
ஏற்றி வழிபடுவோம்!
எண்ணுடனே எழுத்துக்களை
எங்களுக்கு விளக்கி
கண்ணனைய கவின்கலைகள்
கருத்துடனே பழக்கி
மண்ணிலே மாண்புடனே
வாழ வழிவகுத்த
கண்ணெனும் எம் ஆசிரியர்
காலமெல்லாம் வாழ்க!

கவிமணி க. ஆனந்தராசா

## நாளை

புரட்டாதி - 21
புதன்கிழமை
திதி: துதியை
முன்னிரவு: 09.33 வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
முன்னிரவு 08.31 வரை.
சுபநேரம்: 04.33 - 06.02
இராகுகாலம்: 12.03 - 1.33
(பகலுக்கும் இரவுக்கும் பஞ்சாங்கநேரப்படி)

## உதயவாக்கு

உன்னைக் குற்றவாளி என்று சொல்வதற்கு முன்பு எதிர் வாதம் செய்ய தேடன்னிப்புக் கேட்காதே.

- சார்லஸ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறி விட்டது

எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் இரண்டும் (இல. 301540299V) திருவள்ளுவர் அச்சகத்திற்கும் (491, பருத்தித்துறை வீதி, நல்லூர்) செம்மணிவீதி நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலைக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திருவள்ளுவர் அச்சகத்தில் கொடுத்து உதவவும். க. சொக்கலிங்கம், நாயன்மார்கட்டு. (59663)

### விற்பனைக்கு

இலக்கம் 6, சந்தனமாதா கோயில் ஒழுங்கை, சுண்டுக்குளியில் இரண்டு பரப்பு காணியுடனான புதிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. சந்திரகுமாரன், 73/ 34C சரணான்கார வீதி. தெகிவளை. தொலைபேசி 074- 211715.

(சி/5028)

### வீடு விற்பனைக்கு

ஆவரங்கால் சிவன் ஒழுங்கையில் உள்ள வசதியான வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளவும்: திருமதி. கு. மீனலோசனி (தேவி) சிவன்ஒழுங்கை, ஆவரங்கால். (59576)

### O/L MATHS

அட்சர கணிதம், கேத்திர கணிதம், எண் கணிதம், புதிய கணிதம் ஆகிய பிரிவுகளின் சகல அலகுகளையும் 33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (59651)

### பரிசு

பரிசளிப்பதற்கு ஏற்ற நூல்கள்: 1 யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் இடம் பெயர்வின் கதை. 2. யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல்: 3 நாடகம் எழுதுவது எப்படி! விளக்கும் நூல் அராலியூர் சுந்தரம் பிள்ளை எழுதியவை ரூபா 50. (59623)

## இரு நாள் பயிற்சி வகுப்புக்கள்

நெல்லியடி, ஒக். 6

வடமராட்சி கிழக்கிலுள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நிர்வாகிகளுக்கு இரு நாள் பயிற்சி வகுப்புகள் நடைபெற விருக்கின்றன.

இம்மாதம் 23 ஆம், 30 ஆம் திகதிகளில் அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவிருக்கும் இப் பயிற்சி வகுப்பில் நிர்வாக நடைமுறை, கணக்கு எழுதும் முறை போன்றவைகள் கூட்டுறவுக் கல்லூரி அதிபரினால் விளக்கிக் கூறப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ–109)

## 10 ஆவது ஆண்டு நிறைவு விழா

நீர்வேலி, ஒக். 6

யாழ்ப்பாணம் சமூக அபிவிருத்தி மன்றத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர் வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லை ஆதீன மண்டபத்தில நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவையொட்டி சிறப்புமலர் வெளியீடும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (இ–110)

---

யா / யூனியன் கல்லூரி

தெல்லிப்பழை

## உலக ஆசிரியர் நாள்

06 — 10 — 1998

"கல்வி கரையில கற்பவர் நாள் சில"

கரையில்லா கல்விக் கடலிலே கலங்கரை விளக்காக நின்று யூனியன் மைந்தராம் எமக்கு வழிகாட்டும் எமது ஆசிரியப் பெருந்தகைகளை இப்பொன்னாளிலே வாழ்த்தி வணங்குகின்றோம்.

எமது ஆசிரியர்களைக் கௌரவிக்கும் ஆசிரியர் தினவிழா 06-10-98 (இன்று) முற்பகல் 9-00 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் செல்வன் மகேந்திர ராஜா பிரவீணன் (சிரேஷ்ட மாணவ தலைவன்) அவர்கள் தலைமையில் நடைபெறும். அத்தருணம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி;

பழைய மாணவர், பெற்றோர்,
நலன்விரும்பிகள், மாணவர்கள்.

(59675)

---

## அகில உலக ஆசிரியர் தினத்தில்

ஆசிரியர்களுக்கு

அன்பு வாழ்த்தினை அள்ளிச் சொரியும்

## சிவகணேசன் புடைவையகம்

எழுத்தறிவிக்கும் தெய்வங்களே
 ஈழ மண்ணின் நெஞ்சங்களே!
தொழுவதற்குரிய தெய்வங்களே – அறிவினை
 தூண்டிடும் எங்கள் நெஞ்சங்களே

கடமை கண்ணியம் கற்றுத் தருவீர்களே!
 காலம் முழுவதும் எண்ணிட வைப்பீர்களே
உடைமையாய் எம்மை ஏற்பீர்களே
 உயரிய கல்வி தருவீர்களே

பாரினில் உங்களை போற்றுகின்றோம்
 பக்தி செய்து வணங்குகின்றோம் – கல்வி
தேரினில் எம்மை ஏற்றி வைத்த
 தெய்வங்களே உம்மை வாழ்த்துகின்றோம்.

எங்கள் வாழ்வில் ஏணிகளானீர்களே!
 ஏற்றம் தந்தெமை வளர்த்தீர்களே
பொங்கும் கருணை சொரிந்தீர்களே
 போற்றிடும் தெய்வ மானீர்களே!

நெஞ்சம் மறக்குமா என்றும் எம்
 நினைவில் கலந்த உங்களை
தஞ்சம் தந்து கல்வி தந்த உங்களை – எம்
 தமிழ் நெஞ்சம் மறக்குமா?

மதுரகவி

"ஜவுளி ரகங்களின் அரங்கம்"

## சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

இல. 41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(சி-5088)

---

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 25 | 06 |
| — | — |
| 05 | 10 |
| — | — |
| 1931 | 1986 |

திருமதி

## பிலோமினம்மா டானியல்

(மறைந்த மக்கள் எழுத்தாளர் கே. டானியல் அவர்களின் துணைவியார்)

பன்னிரண்டு நினைவுச் சுவடுகளில்
பனிக்குதம்மா நம் கண்ணீர்ப்பூக்கள்
பெற்றாண்டு பேணி வளர்த்தாய் பிரிந்தாய்
தனித்தமம்மா நாம் உதிரிப்பூக்கள்.

தங்கள் நினைவுகளில்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"வசந்தம்"
76/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி–5092)

---

## ஆசிரியர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக். 6

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆசிரியர் தினவிழா இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரியின் நூலக மண்டபத்தில் நடைபெற உள்ளது. (இ–8)

★ ★ ★

யாழ்ப்பாணம் கன்னியர் மடம் மகாவித்தியாலய ஆசிரியர்தினவிழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அபிவிருத்திச்சங்க உப தலைவர் மு. பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும்.

(இ–8)

★ ★ ★

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஒழுங்கு செய்துள்ள ஆசிரியர் தினவிழா முற்பகல் 11 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் க. திரவியம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், சங்கானைக் கோட்டக்கல்வி அதிகாரி ஆ. வ. கணேசலிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வர். (இ–8)

★ ★ ★

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் இன்று முற்பகல் 10. 00 மணிக்கு பிரதான மண்டபத்தில் வித்தியாலய பழைய மாணவர்களால் ஆசிரியர் தின விழா கொண்டாடப்படும். (இ–30)

★ ★ ★

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவகளால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஆசிரியர் தினவிழா இன்று காலை 8. 30 மணிக்கு மருதனார்மடத்தில் அமைந்துள்ள கல்லூரி மண்டபத்தில் செல்வன் வை. சாரங்கன் தலைமையில் நடைபெறும்.

(இ–30)

★ ★ ★

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் இன்று காலை 9. 30 மணிக்கு வித்தியாசாலை பிரதான மண்டபத்தில் பழைய மாணவர்களால் ஆசிரியர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

(இ–30)

★ ★ ★

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் நடத்தும் ஆசிரியர் தின விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

(தி–110)

★ ★ ★

அராலி இந்துக் கல்லூரியின் ஆசிரியர் தின விழா இன்று காலை 8.30 மணிக்கு டாக்டர் எஸ் பரமசிவம் பிள்ளை தலைமையில் நடைபெறும். (தி–8)

★ ★ ★

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு மேற்படி கல்லூரி மண்டபத்தில் சி. சிவலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

(தி–17)

★ ★ ★

ஊரெழு கணேச வித்தியாசாலையும், இதனுடன் இயங்கி வரும் ஊரெழு சி.சி. பாடசாலையும் இணைந்து நடத்தும் ஆசிரியர் தினவிழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் து. ஜெகதீஸ்வரன் தலைமையில் கணேசா வித்தியாசாலையில் நடைபெறும். (இ–8)

★ ★ ★

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா மத்தியமகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழாவும், கலை நிகழ்ச்சிகளும் இன்று காலை 9. 30 மணிக்கு மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். (இ–135)

★ ★ ★

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சபை, மாணவர் முதல்வர் சபை, ஆசிரியர் நலன்புரிச்சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் ஆசிரியர் தினவிழா இன்று காலை 9. 30 மணிக்கு கல்லூரியின் விவேகானந்த மண்டபத்தில் நடைபெறும்.

(இ–8)

★ ★ ★

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியர்தின ஒன்றுகூடலை அடுத்து மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (இ–15)

### நல்லாசிரியர்...,

(ஏழாம் பக்கத் தொடர்)

இந்த நன்னாளில்ஆசிரியத் தொழிலின் சிறப்பையும் புனிதத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து செயற்படுகின்ற நல்ல ஆசான்களின் பாதங்களைப்பணிந்து அவர்களை மனநிறைவுடன் வாழ்த்துவோமாக. ★

## தபாற்பெட்டி வசதி

செம்பியன்பற்று, ஒக். 6

இதுவரை தபாற் பெட்டி வசதியற்றிருந்த வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதிக்கு புதிதாக தபாற்பெட்டி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. (இ–36)

---

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

## அந்தோனிப்பிள்ளை நிமலன் சந்திரதாஸ்

29 – 09 – 1998 அன்று

அமரர் நிமலன் சந்திரதாஸ் அவர்களின் அகால மரணத்தையிட்டு அவரது அன்பு மனைவி, பெற்றோர், சகோதரங்கள் உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம். அத்துடன் இவரின் ஆன்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதுடன்

08 - 10 - 98 வியாழக்கிழமை மாலை (புதிய நேரம் 5 மணிக்கு) தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பெ. செபஸ்ரியன்
குடும்பத்தினர்

தாளையடி. (59672)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு

# செம்மணி விவகாரத்தால் நெருக்கடி

யாழ்ப்பாணம், ஒக். 6

செம்மணிப் புதைகுழி தோண்ட உடனடியாக நடவடிக்கை எடுக்கா விட்டால் எமது யாழ். அலுவலகத்தை மூடுமாறு மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் எமக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளது:

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் மேற்கண்டவாறு ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுபபியுள்ள 'பக்ஸ்' செய்தியில் தெரிவித்துள்ளனர்.

மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் யாழ். அலுவலகத்தில் சமர்ப்பித்த மகஜரில் தெரிவித்த பின்வரும் விடயங்களை யாழ். அலுவலக அதிகாரிகள் பக்ஸ் மூலம் தலைவருக்கு அனுப்பியுள்ளனர்.

★ கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துககும் இடையிலான விமான சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் ஆணைக்குழு அதிகாரி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பல் அல்லது விமானப்படை விமானம் மூலம் இங்கு வரவேண்டும்.

★ பல தடவைகள் விசாரணைகளுக்கு முகங்கொடுத்து விட்டோம். இன்னும் விசாரணை என்று காலத்தைக் கடத்தாமல் உடன் செம்மணிப் புதைகுழியைத் தோண்ட வேண்டும்.

★ காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை நடத்த நியமித்த ஆணைக்குழுவின் பிரதிநிதியின் பதில் எதுவும் எமக்கு அனுப்பப் படவில்லை.

★ செம்மணிப் புதைகுழி தோண்டப்படாவிட்டால் யாழ்ப்பாணத்திலுள்ள அரச செயலகங்கள் முன் போராட்டம் நடத்தப்போவதாக எச்சரித்துள்ளனர். (இ-3)

## வாழ்த்துகின்றோம்

### யா/யூனியன் கல்லூரி

(தெல்லிப்பழை)

யா/யூனியன் கல்லூரியில் தற்போது கற்பித்துக் கொண்டிருக்கின்ற, கற்பித்துச் சென்ற அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்விட்டு மனமுவந்து வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

(59686)

## வாழ்த்துகிள்றோம்

எமது சங்கத்தின் காப்பாளரும்,
மூத்த உறுப்பினருமாகிய
'சிவத்தமிழ்ச்செல்வி' 'துர்க்கா துரந்தரி'
செல்வி

### தங்கம்மா அப்பாக்குட்டி J.P.

அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தினால்
'கலாநிதி'

பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையையிட்டுப் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றோம். அன்னார் நீடூழிகாலம் வாழ்ந்து சமய, சமூகப் பணிகளைத் தொடர்ந்தும் ஆற்ற எல்லாம்வல்ல துர்க்கா தேவியை வேண்டுகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/இராமநாதன் கல்லூரி.

(சி/5096)

## கண்ணீர் அஞ்சலி

அகால மரணமடைந்த எமது சக மாணவிகளான

### செல்வி இமாக்குலேற்றா பெர்னாண்டோ
### செல்வி திரெசிற்றா அருள்மணி கூஞ்சு

ஆகியோருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன், இவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் இவர்களின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விஞ்ஞானபீட முதலாம் வருட
மாணவர்கள்

(50678)

## 8 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

திருமதி

### அற்புதமலர் சிவபாலன்

செல்வி

### சிவகீத்தா சிவபாலன்

29 - 09 - 98 அன்று விமான விபத்தில் அகால மரணமடைந்த எம் மனதை விட்டு அகலாத எம் இனியவர்களே!

வாழ்க்கையின் வசந்தத்தை எதிர்நோக்கி கனடா புறப்பட்ட நீ, இப்படி ஓர் இலையுதிர் காலத்தைத் தருவாயென எதிர்பார்த்தோமா?

அன்னையுடன் சேர்ந்து சென்ற நீ உன் அருமைத் தம்பியையும் அப்பாவையும் எம்மையும் ஏனோ தவிக்கவிட்டாய்?

கீத்தா!

இன்றைய உனது 22 வது பிறந்த நாளிலே வாழ்த்துக் கூறவேண்டிய நாம் கண்ணீர் அஞ்சலி அல்லவா செய்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கும்
ஜெகதாம்பாள், நிர்மலா, பிறேமா,
அனந்தினி, பாமா, வீபூ, பூபதி, சியாமளா,
கவிதா, பாபு, துளசி மற்றும் அயலவர்கள்

சப்பச்சி மாவடி,
சாவகச்சேரி.

(சி/5098)

## ஆசிரியர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 6

ஆசிரியர் தின விழாக்கள் இன்று பல பாடசாலைகளிலும், கல்வி நிறுவனங்களிலும் நடைபெறவுள்ளன. யாழ். மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை, பழைய மாணவர் சங்கம், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன இணைந்து இன்று ஆசிரியர் தின விழாவை நடத்தவுள்ளன.

★ ★ ★

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் இன்று முற்பகல் 10 மணிக்கு ஆசிரியர் தின விழா பழைய மாணவர் சங்கத் தலைவர் திருமதி எம். ஜி. தவரட்ணம் தலைமையில் நடைபெறும்.

★ ★ ★

புத்தூர் ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு ஆசிரியர் தின விழா கொண்டாடப்படவுள்ளது. கோப்பாய் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ராஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

★ ★ ★

அளவெட்டி வடக்கு அ. மி. த. க. பாடசாலையில் ஆசிரியர் தினத்தை ஒட்டி இன்று ஆசிரியர்களைக் கௌரவிக்க பாடசாலை அபிவிருத்திச் சபையும், பழைய மாணவர் சங்கமும் ஏற்பாடு செய்துள்ளன. (ஐ)

★ ★ ★

ஏழாலை மேற்குசைவ சன்மார்க்க வித்தியாசாலையில் இன்றுகாலை9மணிமுதல்ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட உள்ளது. (ஐ)

★ ★ ★

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இன்று காலை 9.30 மணி முதல் ஆசிரியர் தின விழா நடைபெறும். (ஐ. 109)

★ ★ ★

மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் இன்று உலக ஆசிரியர் தினம் அதிபர் அ. மு. அருணாசலம் தலைமையில் கொண்டாடப்பட உள்ளது. (ஐ 90)

★ ★ ★

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையில் இன்று ஆசிரியர் தின நிகழ்வுகள் அதிபர் அ. நடராசா தலைமையில் [illegible] ளன. (ஐ)

(ஆசிரியர் தின நிகழ்வுகள் தொடர்பான மேலும் செய்திகள் 8 ஆம் பக்கத்தில்)

# யாழ். வர்த்தகர்களுக்கு படையினர் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ்ப்பாணத்தில் உள்ள வியாபாரிகள் தெரிந்தோ தெரியாமலோ பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவி செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் கடும் தண்டனை வழங்கப்படும். அத்தோடு அவர்களுடைய சொத்துகள் அனைத்தும் அரச உடைமையாக்கப்படும், எனவே பயங்கரவாத அமைப்புகளுக்கு உதவி செய்வதிலிருந்து தவிர்த்துக்கொள்ளவும்.

— இவ்வாறு யாழ். வர்த்தகர்களுக்குப் பலாலியிலுள்ள இராணுவத் தலைமைபீடம் பகிரங்க அறிவித்தல் மூலம் ஆலோசனை தெரிவித்திருக்கின்றது.

"சாவகச்சேரிப் பகுதியில் அமைந்துள்ள ஜெயா புகைப் படம் பிடிக்கும் நிலைய உரிமையாளரான — 65 வயதுடைய — இராமலிங்கம் சிவஞானம் என்பவர் கடந்த மாத இறுதியில் சாவகச்சேரி பகுதியில் மறைந்திருக்கும் மூன்று புலிகள் இயக்க உறுப்பினர்களுக்குத் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் புகைப்படத்தைப் பிடித்துக் கொடுத்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

சந்தேகநபர் படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளை மேற்கொண்ட போது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார். இதனால் பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்கமையச் சந்தேக நபருக்குத் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" — என்றும் பலாலி இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவினைத் தொடர்ந்து நடைபெற்று வரும் நிகழ்வுகளில் இன்று சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை கைலாசபதி கலையரங்கில் மாலை 3 மணிக்கு நடைபெறும்.

'இந்து சமயத்தில் மலர்கள் — சம்பந்தர் பாடல்களினூடாக ஒரு நுனித்த நோக்கு' என்ற தலைப்பில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேருரை வழங்குவார். (ஐ-9)

## கண்ணீர் அஞ்சலி

வேலணை கிழக்கு J/14 கிராம அலுவலர்
திரு. கா. கணேசலிங்கம்
அவர்களின் அன்புச்சகோதரி
திருமதி

### விஜயரெட்ணம் பரமேஸ்வரி

அவர்களின் திடீர் மறைவையிட்டு ஆறாத்துயரில் இருக்கும் அவரின் கணவர், குழந்தைகளுக்கும் கிராம அலுவலர் திரு கா. கணேசலிங்கம் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்து எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

பிரதேச செயலர்,
செயலக உத்தியோகத்தர்கள்,
கிராம உத்தியோகத்தர்கள்,
சிற்றூழியர்கள்.

பிரதேச செயலகம்,
தீவுப்பகுதி தெற்கு,
வேலணை.

(59679)

## மலிவு விற்பனை

தெரிவுக்கு முந்துங்கள்!

தீபாவளித் திருநாளை முன்னிட்டு
06 10-1998 முதல் 19-10-1998 வரை

எமது ஸ்தாபனத்தில் மலிவு விற்பனை நடைபெறும் என்பதை எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

### ஜி. எஸ். லிங்கநாதன் அன்கோ

இல. 13, 14, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

(59688)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 | 06 |
| — | — |
| 03 | 10 |
| — | — |
| 1936 | 1996 |

### அமரர் வை. சுந்தரலிங்கம்

பிரதிக் கல்விப் பணிப்பாளர் விஞ்ஞானம் வலயம்!

ஈராண்டுகள் உருண்டோடினவே — எம்மால் ஜீரணிக்கவே முடியவில்லை — விஞ்ஞான மேதையாயிருந்து வழிகாட்டிய மேதாவியே உம் திருமுகம் காண ஏங்குகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்.

மானிப்பாய்.

(சி/5099)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சேவை பரீட்சை 160 பேர் சித்திபெற்றனர்

திருகோணமலை, ஒக். 6

இலங்கை கல்விச்சேவைக்கு (SLES) ஆள்களைச் சேர்ப்பதற்கு 1994 இல் நடத்தப்பட்ட பரீட்சையில் — தமிழ் மொழி மூலம் தோற்றிய — 160 பேர் சித்தியடைந்திருப்பதாகக் கொழும்புத் தகவல்களை மேற்கோள் காட்டி வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பரீட்சை முடிவுகள் கடந்த நான்கு வருடங்களாக வெளியிடப்படாமல் வைக்கப்பட்டிருந்ததும் —

இதனால் உருவான கல்வி நிர்வாக அதிகாரிகள் பற்றாக்குறையினால் வடக்கு. கிழக்கில் கல்விநிர்வாகத்தை புதிய வலயங்களின் அடிப்படையில் வலய மட்டத்துக்குப் பரவலாக்க முடியாத நெருக்கடி ஏற்பட்டதும்—

மத்திய கல்வி அமைச்சுக்கு இந்நிலைமை சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து பரீட்சை முடிவுகளை வெளியிட கல்வி அமைச்சு தீர்மானித்ததும்— தெரிந்தவையே.

அடுத்து வரும் வாரங்களில் இந்த முடிவுகள் உத்தியோகபூர்வமாக வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பரீட்சைக்குத் தமிழ் மொழி மூலம் தோற்றியவர்களில் 160 பேர் சித்தியடைந்திருப்பதாகவும் —

அவர்களில் 140 பேர் வடக்கு — கிழக்கு மாகாண கல்வியமைச்சுக்கும், எஞ்சியோர் மத்திய கல்வியமைச்சுக்கும் விடுவிக்கப்படுவர் எனவும் —

மாகாணக் கல்வியமைச்சுக்குத் தற்போது தெரியப்படுத்தப்பட்டிருப்பதாக அறிய வந்தது.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சில் கல்வி நிர்வாக சேவை தரத்துக்கு மட்டும் 310 வெற்றிடங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில்—

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கல்வி நிர்வாகத்தைப் பரவலாக்கும் புதிய திட்டத்தின் கீழ் புதிய வலயங்களை உருவாக்கும் திட்டம் கடந்த முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ள போதிலும், அந்த வலயங்களுக்குரிய ஆளணியினர் இதுவரை நியமிக்கப்படாததால் அத்திட்டம் செயற்பாட்டுக்கு வருவது தாமதமாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு வலயத்துக்கும் உரிய வலயக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் கீழ் கோட்டங்களுக்குப் பொறுப்பாகச் செயற்படும் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் குறித்து இன்று இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்விச் சேவை ஆலோசகர்கள் தவிர்ந்த ஏனைய ஆளணியினர் அடுத்து வரும் தினங்களில் தெரிவு செய்யப்படுவர் என்றும்—

உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்விச் சேவை ஆலோசகர்கள் நியமனங்கள் ஸ்ரீலங்கா கல்விச் சேவை பரீட்சை முடிவுகள் வெளியான பின்னரே இறுதியாக்கப்படும் என்றும்—

நம்பத் தகுந்த சில வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-1)

---

## பி. பி. சி.

(முதலாம் பக்கத் தொடர்)

தம் தொடர்பாக உள்ளூர் தொடர்பு சாதனங்கள் வெளியிடும் தகவல்களை விட மேலதிக தகவல்களை பி.பி.சியின் சிங்கள சேவை வெளியிடுவதாகத் தெரிவித்தே அந்தச் சேவையை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் மூலமாக அஞ்சல் செய்வதை தடை செய்ய முயற்சி எடுக்கப்படுவதாகக் கொழும்புச் செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

அரச சார்புப் பத்திரிகை ஒன்றிலும் தொலைக்காட்சி ஒளிபரப்பு ஒன்றிலும் உயர் அதிகாரிகள் இந்தத் திரைமறைவு முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-10)

---

## விமான...

(முதலாம் பக்கத் தொடர்)

25 பேர் அடங்குவர் எனவும் இந்தக்குழு இன்று அல்லது நாளை தனது விசாரணைகளை ஆரம்பிக்கும் எனவும்- கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-10)

---

## அ'புரம்...

(முதலாம் பக்கத் தொடர்)

தமிழ்க் கைதிகள் உற்சாகமடைந்து காணப்பட்டதாகவும் எழுச்சிப் பாடல்களைப் பாடி ஆரவாரம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

அதனை அடுத்தே அவர்கள் மீது தாக்குதல் நடத்தும் திட்டத்தை சிங்களக் கைதிகள் இரகசியமாகத் தீட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காலைப் பிரார்த்தனைக்கு ஒன்று கூடும் வேளையில் குழப்பத்தை ஏற்படுத்தி அவர்கள் மீது தாக்குதல் நடத்த சிங்களக் கைதிகள் திட்டமிட்டிருந்தது பின்னர் தெரியவந்துள்ளது.

சிறைச்சாலைக்குள் முறுகல் நிலை உருவாகுவதை அவதானித்த சிறைச்சாலை அதிகாரிகள் உடனடியாக செயலில் இறங்கி அங்கிருந்த 125 தமிழ் கைதிகளில் விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்களான 80 பேரையும் களுத்துறைச் சிறைக்கு இடமாற்றினர். தாக்குதலுக்குத் திட்டமிட்ட சிங்களக் கைதிகள் அனைவரும் கண்டிபோகம்பரை சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

முன்னாள் அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவரே இத்தாக்குதலுக்கான திட்டங்களை வகுத்ததாக சிறைச்சாலை அதிகாரிகளின் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (ஐ-21-9)

---

## பலியான...

(முதலாம் பக்கத் தொடர்)

அங்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்படும் என்றும்—

மன்னார் அரச அதிபர் தெரிவித்தார்.

''அந்த விமானத்தில் பயணம் செய்து உயிரிழந்தவர்களின் சடலங்கள் பூநகரி, பள்ளிக்குடா, நாச்சிக்குடா, இரணைதீவு, கொழும்புத்துறை என பல இடங்களில் ஒவ்வொன்றாகக் கரை ஒதுங்கி வருகின்றன; ஆங்காங்கே அவை அடக்கம் செய்யப்படுவதாகவும் தகவல்.

'எனவே இனிமேலும் சடலங்களைச் சுழியோடித் தேடுவதற்கு அவசியம் இருக்காது என நினைக்கிறேன்; அதனால் எதுவித பயனும் விளையப்போவதில்லை.

''இந்த விமான விபத்தில் உறவினர்களைப் பறிகொடுத்தோரின் ஆதங்கத்தை நான் அறிவேன். அவர்களின் துயரத்தில் பங்கு கொள்கின்றோம். இறந்தோரின் ஆத்மா சாந்தியடைய வேண்டும். அதற்கு நாங்கள் செய்யக் கூடிய நல்ல காரியம் பயணிகள் பலியான இடத்துக்கு அவர்களின் உறவினர்கள் எல்லோரையும் அழைத்துச் சென்று அந்தப் பயணிகளின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தனை செய்வதேயாகும்.

இதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரின் உதவி கிடைக்கும் என நான் எதிர்பார்க்கிறேன். உறவினர்களைப் பறிகொடுத்தோர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளை நாடினால் அவர்கள் உதவி செய்வார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்'' — இவ்வாறு மன்னார் அரச அதிபர் எஸ். எம். குருஸ் மேலும் தெரிவித்தார்.

மேல்நாடுகளில் இவ்வாறு கடலில் உயிரிழப்போரின் சடலங்களை மீட்கமுடியாத நிலை ஏற்படும்போது அவர்களின் உறவினர்களை அக்கடற்பகுதிக்கு அழைத்துச் சென்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடத்த ஏற்பாடு செய்யப்படுவது வழமை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3-167)

---

# முதியோர் தின நிகழ்வையொட்டி கைதடியில் மருத்துவப் பரிசோதனை

யாழ்ப்பாணம், ஒக். 6

முதியோர் தின நிகழ்வு வாரத்தையொட்டி நல்லூர் லயன்ஸ் கழகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணி முதல்பிற்பகல் 2 மணி வரை நீரிழிவு, வாய்ப்புற்று, இரத்த அழுத்தம், முழுமையான மருத்துவப் பரிசோதனை ஆகியவற்றை கைதடி முதியோர் இல்லத்தில் மேற்கொள்ளவுள்ளது.

டாக்டர் ஜி. பிரதீப்குமார் தலைமையில் மருத்துவ பீட மாணவர்களும் இணைந்து பரிசோதனைகளை நடத்தவுள்ளதாக நல்லூர் லயன்ஸ் கழகத்தலைவர் மா. தவபாலன் தெரிவித்தார்

கடந்த முதலாம் திகதி மரநடுகைச் செயற்றிட்டத்தை நல்லூர் லயன்ஸ் கழகம் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. (இ-8)

---

# காங்கேசன் முகாமில் 11 பேர் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 6

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 11 பேர் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கார்த்தி சத்தியசீலன், பரணபஸ் தோமஸ்மோரே, கிட்டிணன் தர்மபாலன், கணபதி தங்கராஜா, ரட்ணசிங்கம் விக்னேஸ்வரன், நல்லதம்பி அகிலேஸ்வரன், வீரசிங்கம் சிவராஜா, ரட்ணம் சசிகுமார், தம்பிராஜா கலைமகன், எம். டேவிட் அந்தோனி, டேவிட் அந்தோனி சுஜித்திரா ஆகியோரே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்களை தேசிய மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். கிளை நிறுவன பணியாளர்களான எஸ். சிறீதரன் மற்றும் ஜே. என். போமன் ஆகியோர் அண்மையில் காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்குச் சென்று பார்வையிட்டனர்.

தமக்கு தரப்படும் உணவில் தமக்கு போதிய கறி சேர்க்கப்படுவதில்லை என்றும்—

எந்தக் குற்றச்சாட்டும் இல்லாமல் கைது செய்த போதும் தற்பொழுது விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்று தங்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது என்றும்—

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் மனித உரிமை ஆணைக்குழுப் பணியாளர்களிடம் தெரிவித்துள்ளனர். (ஐ-5-6)

---

## மாங்குளத்தில் தொடர்ந்து மோதல்

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் மாங்குளத்தில் தாம் கைப்பற்றிய பகுதிகளில் இருந்து தொடர்ந்தும் முன்னேறி வருகின்றனர் எனவும் —

விடுதலைப் புலிகள் பீரங்கிகள், மோட்டார்கள் என்பனவற்றைக் கொண்டு படையினரின் முயற்சியை தடுக்க முற்பட்டு வருவதாகவும்—

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-9)

---

# முறிகண்டிப்பகுதியில் கிபிர் குண்டு வீச்சு

முறிகண்டிப் பகுதியில் கிபிர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின என்று வவுனியா செய்திகள் தெரிவித்தன.

முறிகண்டி ஆலயப்பகுதியில் இடம்பெற்ற இத்தாக்குதலில் சக்திவேல் ஜோர்ஜ் (வயது 26), என். பாலன் (வயது 44), கஜேந்திரராஜா (வயது 48), சந்திரமோகன் நடேசு என்ற பொதுமக்கள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-9)

---

## விமானம் கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

அந்தப் பாகத்துடன் மன்னார் அரச அதிபர் வழங்கும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டபின்னர், விமானம் கடலில் வீழ்ந்தது சட்டரீதியாக உறுதிப்படுத்தப்படும் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே —

விமானம் கடலில் வீழ்ந்ததை சட்டரீதியாக உறுதிப்படுத்துவதற்கும் —

விமானம் வீழ்ந்த இடத்துக்கு பலியானோரின் உறவினர்களை ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடத்துவதற்கு கூட்டிச் செல்லும் முன்னோடி நடவடிக்கையாக அந்த விமானம் வீழ்ந்த இடத்தை அடையாளம் காணவும் —

அந்த இடத்துக்குச் செல்வதற்கு மன்னார் செயலக அதிகாரிகள் முயன்று வருவதாகக் கூறப்படுகின்றது.

இதற்காக ஆழ்கடல் சுழியோடிகள் ஐவருடனும் உரிய றோலர் படகுகளுடனும் மற்றைய ஆயத்தங்களுடனும் அவர்கள் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அந்த இடத்துக்கு மன்னார் செயலக அதிகாரிகள் செல்வதாயின் அவர்களுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரும் சென்று அங்கு பிரசன்னமாக இருக்க வேண்டும்என்று பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டிருப்பதாகவும் —

இதுவிடயமாக மன்னார் செயலகம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொண்டுள்ள போதிலும்அக்குழு திட்டவட்டமான முடிவு எதனையும் தெரிவிக்காமல் — பதில் தராது—இழுத்தடிப்பதாகவும்—

மன்னார் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-167)

---

## பதுளையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

படுத்தியதாகவும் —

சில செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

சோசலிஷ சமத்துவக் கட்சி (புரட்சிகர கம்யூனிஸ்ட் லீக்) என்ற இடதுசாரி அமைப்பைச் சேர்ந்த பதினைந்து பேரே இத்தகைய ஊர்வலத்தை நடத்த முற்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவர்களில் பெரும்பாலானோர் சிங்களவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இடதுசாரிக் கட்சி ஒன்றைச் சேர்ந்த சில பிரமுகர்கள் அண்மையில் புலிகளால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்றும்—

அந்தக் கட்சியிலிருந்து பிரிந்து வந்த சிலரே இவ்வாறு ஊர்வலம் நடத்த முயன்ற சமயம் அப்பகுதி பொதுமக்கள் அதற்கு எதிராகத் திரண்டதாகவும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

---


## உலக ஆசிரியர் தினம் 98

''கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக''

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் அரும்பணி ஆற்றிவரும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு தமது கல்விப் பணியை இனிதே தொடர இன்று மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்கள்,
நலன்விரும்பிகள்,
பழைய மாணவர்கள்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

(சி/5100)



## உலக ஆசிரியர் தினம் 1998

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள்
அனைவரினதும், அவர்களின் தன்னலம் கருதாத சேவையையும் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

''குரு பிரம்மா குரு விஷ்ணு
குரு தேவோ மகேஸ்வரக
குரு சாஷாத் பரப்பிரம்மா
தஸ்மை ஸ்ரீ குருவே நமக''

வரதன் கொமினிக்கேஷன்
வரதன் சேவிஸ் ஸ்ரேஷன்
வரதன் ஜாம்ஸ்.
புன்னாலைக்கட்டுவன்.

(59664)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறை வேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06- 10- 1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org